நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 14 சனிக்கிழமை (26.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 152

# குண்டு வெடித்தது பஸ்ஸில் பயணிகள் 24 பேர் உயிரிழப்பு!

## பிலியந்தலவில் நேற்றிரவு நிகழ்ந்த கோரம்; பஸ்ஸுக்கு காத்திருந்தவர்கள் உட்பட 70 பேர் காயம்!!

கொழும்பு, ஏப்ரல் 26

**கொழும்புக்குத் தெற்கே, புறநகர்ப் பகுதியான பிலியந்தல பஸ் நிலையத்தில், பயணிகள் நிறைந்திருந்த நேரத்தில்-இரவு 6.45 மணியளவில்-பஸ் ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் பயணிகள் 24 பேர் உயிரிழந்தனர்.**

**இக்கோரச் சம்பவத்தில் அப்பாவிப் பயணிகள் 70 பேர் படுகாயமுற்றனர். மேலும் 30 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன.**

கொழும்புக்கு தெற்கே உள்ள புறநகர் பகுதியான பிலியந்தலை பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்று மாலை பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து புறப்படத் தயாரான பயணிகள் நிறைந்திருந்த - இ.போ.ச. பஸ்ஸினுள் மாலை 6.45 மணியளவில் இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

குண்டுவெடிப்பில் சிக்கி 24 பேர் உயிரிழந்தனர். 70 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 30 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



படுகாயமடைந்தவர்கள் பிலியந்தல மற்றும் களுபோவில மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 8 பேர் மேலதிக சிகிச்சை தேவைப்பட்டதால் கொழும்பு, தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

### இடியுடன் பெருமழை பெய்த வேளையில்...

குண்டு வெடிப்பினால் உயிரிழந்தவர்களில் பௌத்த பிக்கு ஒருவர் மற்றும் சிறுவன் ஒருவனும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குண்டி வெடித்த நேரத்தில் இடியுடன் பெருமழை பொழிந்துகொண்டிருந்தமையால் மீட்புப் பணிகளில் மிகுந்த சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன.

குண்டு வெடித்த இடத்திலேயே 10 பேர் மரணமாகினர்; மேலும் 13 பேர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்படும் வழியில் உயிரிழந்தனர்; மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களிலும் ஒருவர் உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் பலர் எரிகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

## நிச்சயமாக புலிகளின் வேலைதான் என்கிறார் இராணுவப் பேச்சாளர்

''இது நிச்சமாக புலிகளின் வேலைதான். அண்மையில் போர் முனைகளில் ஏற்பட்ட தோல்விகளால் அவர்கள் விரக்தியடைந்த நிலையில் பொதுமக்களை இலக்கு வைத்துக் கொன்றுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

பொதியாகச் சுற்றப்பட்ட குண்டு மூன்றாவது வரிசை ஆசனத்துக்கு மேல் பகுதியில் - பயணிகள் தமது பொதிகளை வைக்கும் இடத்தில் - மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் பிரிகேடியர் நாணயக்கார மேலும் கூறினார். (அ-2)

## மருவைக் கைப்பற்றியதாக படைகள் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப். 26

மன்னார் மடுப் பிரதேசத்தை இராணு[illegible]தினர் நேற்றுக்காலை பூரணமாகத் [illegible]து கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்[illegible]ளனர் என்று பாதுகாப்பு ஊடகத் தகவல் மத்திய நிலையம் தெரிவித்தது.

மடுத் தேவாலயத் திருத்தலம் மற்றும் திருத்தல சூழலை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக மன்னார் மடு மாவட்ட ஆயர் இல்லத்திற்கு இராணுவத்தினர் நேற்றுக்காலை அறிவித்துள்ளனர்.

572ஆவது படையணியின் ஏழாவது தரைப்படை மற்றும் 7 ஆவது சிங்கப் படையணி என்பன இணைந்து மேற்கொண்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாதாவைக் கொலு வைக்க அங்கு உடனடியாகச் செல்லமாட்டோம்

### மன்னார் ஆயர் யோசப் சொல்கிறார்

வவுனியா, ஏப். 26

மடுமாதா தேவாலயத்தை படையினர் கைப்பற்றியிருந்தாலும், மாதா சொரூபத்தை கொலு வைப்பதற்கு அங்கு உடனடியாகச் செல்லமாட்டோம். இப்படிக் கூறினார், மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்திரு இராயப்பு யோசப் அடிகள்.

இது தொடர்பாக அவர் பி.பி.ஸி. தமிழோசைக்குக் கூறுகையில்,

மடு மாதா தேவாலயம், இலங்கை இராணுவத்தினர் வசமானது தொடர்பாக எமக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுவில் நேற்றுக் குண்டுவீச்சு

கொழும்பு, ஏப். 26

இரணைமடுவில் உள்ள விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதை மீது நேற்றுக் காலை 9.30 மணியளவில் விமானப்படையின் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குத் தேர்தலோடு புதிய கூட்டணி அமைக்கும் முயற்சியில் அரசு மும்முரம்

கொழும்பு, ஏப். 26

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு பல்வேறு அரசியற் கட்சிகளை ஒன்றிணைத்து புதிய அரசியல் கூட்டணியொன்றை ஏற்படுத்துவதற்கு அரச உயர்பீடம் திட்டமிட்டுள்ளதாக நம்பகரமாக அறியமுடிகின்றது.

இந்தப் புதிய கூட்டணியில் பிள்ளையான் குழுவையும், ஜே.வி.பியின் வீரவன்ஸ அணியையும் அரவணைத்து அரசுடன் இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார் என்று விடயமறிந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கசிந்திருக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குண்டு மீட்பு

கொழும்பு, ஏப்.26

கொழும்பு ஜிந்துப்பிட்டி வீதியோரத்தில் நேற்றுமாலை 4.10 மணியளவில் குண்டொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தின் வீதியோரத்தில் சந்தேகத்திற்கிடமான பொதியொன்று இருந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் பொலிஸாரிடம் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸார் சோதனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'நல்ல காலம்' சோதிடர்களுக்கு!

கொழும்பு, ஏப். 26

கிழக்கு மாகாணசபைத் தேர்தலால் யாருக்கு நன்மையோ, இல்லையோ சோதிடர்களுக்கு மட்டும் 'நல்ல காலம்' என்று சொன்னால் நம்புவீர்களா?

இன்னும் ஒரு சில தினங்களில் ராகு-கேது மாற்றம் இடம்பெறுவதாக செய்திகள் வெளிவந்தன. இதனையடுத்து கொழும்பின் பிரபல சோதிடர்களைத் தமது இல்லங்களுக்கு அழைத்திருக்கும் அரசியல்வாதிகள் சோதிடம் பார்ப்பதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

தேர்தல் பிரசாரப் பணியை எப்போது ஆரம்பிக்கலாம், எந்த நிற உடையில் செல்லலாம், வீட்டை விட்டு வெளியேறும் நேரம் உட்பட்ட இன்னோரன்ன கேள்விகளை அரசியல் பிரமுகர்கள் சோதிடர்களிடம் துருவித் துருவிக் கேட்கின்றனர். பெரும்பாலும் அரசியல்வாதிகளின் குடும்பத்தினரும் ஆரூடம் பார்ப்பதால் சோதிடர்கள் காட்டில் அடைமழை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையிலும் மாற்றம் வரும்

கொழும்பு, ஏப். 26

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு அதிரடி அமைச்சரவை மாற்றமொன்றை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இவ்வருடம் ஆரம்பம் முதல் அமைச்சர்மார் பலர் உயிரிழந்தமையை அடுத்து பல அமைச்சுப் பதவிகளுக்கு வெற்றிடங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருத்த வேலைகளுக்காக நாவலர் வீதி மூடப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட நாவலர் வீதியைப் புனரமைப்புச் செய்யும் பொருட்டு அந்த வீதியில் ஆனைப்பந்திச் சந்திக்கும் கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச் சந்திக்கும் அப்பையா கடை சந்திக்கும் இடைப்பட்ட பகுதி நாளை மறுதினம் திங்கட்கிழமை 28ஆம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 25 ஆம் திகதி வரை போக்குவரத்துக்கு மூடப் பட்டிருக்கும். யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தப்பகுதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதால், மாற்று வழியாக நல்லூர் - அரசடி வீதி, கஸ்தூரியார் வீதி வழியாக நகரத்துக்கு பயணிப்பதற்கும், மீளவும் அந்த வழியால் வெளியேறுவதற்கும் வாகனங்கள் அனுமதிக்கப்படும் என்றும் -

இந்த ஏற்பாட்டுக்கு சகலரும் ஒத்துழை ப்பு வழங்க வேண்டும் என்றும் - ஆணையாளர் கோரியுள்ளார். (அ-1)

# இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழகம், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றை நாளை நல்லூர் பருத்தித்தறை வீதிக்கருகில் கமநலசேவைகள் திணைக்கள ஒழுங்கையிலுள்ள ஈ-ரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடத்த விருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை நடைபெறவிருக்கும் இக்கருத்தங்கு இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதல் கட்டம் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி ந.ப. 12 மணி வரை நடைபெறும். மு.ப. 9.30 மணிக்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக உரை நிகழ்த்துவார். மு.ப.10.30 மணிக்கு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன் அனர்த்த முகாமைத்துவம்-தடுக்கும் முறைகள் பற்றி உரைநிகழ்த்துவார். மு.ப. 11 மணிக்கு யாழ். பல்கலைக் கழக இரசாயனத்துறைத் தலைவர் டாக்டர் ஆ.ஸ்ரீகரன் ஓஸோன் படலம் தொடர்பாக உரையாற்றுவார். மு.ப. 11.30 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஆலோசகப் பொறியியலாளர் எஸ்.அனந்தசயனன் கால நிலைமாற்றங்களும் வரட்சியும் என்பதுபற்றி உரை நிகழ்த்துவார்.

அதன் பின் இடம் பெறும் கட்டம் இரண்டில் விவாதங்களும் கேள்விகளும் இடம்பெறும். (அ-1)

PC Park அனுசரணையுடன் நடாத்தப்படும்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 50 ஓவர் துடுப்பாட்டப் போட்டி - 2008
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,கொக்குவில் இந்துக் கல்லூரிஅணிகளுக்கிடையிலான 50 ஓவர் துடுப்பாட்டப் போட்டியை முன்னிட்டு PC Park அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டு அபிவிருத்தி சபை கிரிக்கெட் வினாடி – வினா போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.
வெற்றியாளர்களுக்கு PC Park வழங்கும் பெறுமதி மிக்க பரிசில்கள்.
விவரங்கள் விரைவில்.....

## துயர் பகிர்கின்றோம்



வடமராட்சிப் பகுதியில் மங்களவாத்திய துறையில் சிறந்து விளங்குபவர்களும் எமது குடும்ப நண்பர்களுமாகிய சிவகுமார் (நாதஸ்வரம்), விஜயகுமார், சதீஸ்குமார் (குட்டி - தவில் வித்துவான்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தை

**மகாலிங்கம் சின்னராசா**

அவர்களின் பிரிவுத் துயர்கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், உறவினர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் (A)

*அல்லையம்பதி*
*ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்,*
*துன்னாலை.*

*பிரிவால் துயருறும்*
சிவஸ்ரீ சாம் சபாநாதக்குருக்கள்.

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா பர்வதம்

மணிமாளிகை, அல்வாயைச் சேர்ந்த திருமதி தம்பிஐயா பர்வதம் 24.04.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிடர் ச.தம்பிஐயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன், வே.பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் கலாநிதி த.கலாமணி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்), திருமதி வ.பர்வதாமணி (ஓய்வுபெற்ற திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்), திருமதி க.கீதாமணி (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, ஆசிரியை) ஆகியோரின் தாயும் சி.வன்னியகுலம் (இலங்கை ரூபவாஹினி தமிழ்ப் பிரிவின் ஓய்வுபெற்ற பணிப்பாளர்), க.கமலேந்திரன் (கூட்டுறவுத் துறையின் ஓய்வுபெற்ற கல்வி உத்தியோகத்தர்), திருமதி ஜெயசீலி கலாமணி (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும் அரவிந்தன் (பொறியியலாளர்), செல்வி வ.அபிராமி (சட்டத்தரணி), வ.சிவகாமி (சீனப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி), க.பரணீதரன் (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன்),க.முரளீதரன் (பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட மாணவன்), க.மதனாஹரன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.04.2008) பி.ப. 2 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தகவல்:*
கலாநிதி த.கலாமணி

(B)

# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் மரணம்

சாவகச்சேரி, ஏப்.26

மீசாலை, சிற்றம்பலம் வீதியில் நேற்று பி.ப 2 மணியளவில் இடி மின்னல் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் சந்திர ஜெயம்(வயது-45) என்பவரே மரணமானவராவார்.

சிற்றம்பலம் வீதியில் உள்ள அவரது பலசரக்குக்கடையில் அவர்இருந்தவேளைஇடி மின்னலுக்கு இலக்கானார். அவருடன் நின்ற மற்றொருவர் சிறுகாயங்களுக்கு ஆளானார்.

தென்மராட்சியில் நேற்று பிற்பகல் கடும் இடி மின்னலுடன் பெரும் மழை பெய்தது.

# தமிழக பல்கலை அனுமதி: இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம்,ஏப்.26

சேவாலங்கா நிறுவனத்தினூடாக இந்தியாவில் உள்ள கோயம்புத்தூர் நேருபல்கலைக் கழகம், தமிழ்நாட்டில் உள்ள காமராசர் மற்றும் அண்ணா பல்கலைக்கழங்களிற்கு அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களை தெரிந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

தவிர்க்க முடியாத காரணத்தால் கடந்த 25ஆம் திகதி நடைபெற இருந்த பரீட்சை பிற்போடப்பட்டது. அன்றையதினம் தோற்ற வேண்டிய பரீட்சார்த்திகளை குறித்த நேரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நேர்முக பரீட்சைக்கு தோற்றுமாறு பிரதி மாவட்ட திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-302)

# அதிகாலையில் தாக்கப்பட்டவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.26

அதிகாலைவேளை இனந்தெரியாத சிலரின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம், திருநகர்ப் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அருட்பிரகாசம் ரவிக்குமார் (வயது 26) என்பவரே படுகாய மடைந்தவராவார்.

மேலும் இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

அதிகாலை வேளை கிடைத்த தொலைபேசி அழைப்பின்பேரில் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்த யாழ்.போதனா வைத்திய சாலை அம்புலன்ஸ் திருநகர்பகுதியிலுள்ள மதகொன்றில் படுக்க வைத்த நிலையில் இருந்த படுகாயமடைந்த நபரைக் கொண்டு வந்து வைத்தியசாலையில் அதிகாலை 4.30 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டன. தலைமயிர் பிளேட்டி னால் இடையிடையே வழிக்கப்பட்டிருந்தது. வழித்த இடங்களில் பிளேட்டினால் வெட்டுண்ட காயங்களும் காணப்பட்டன. (அ-15)

# சாவகச்சேரியில் திங்கள் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.26

உலக புத்தக தினத்தையொட்டி சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொது நூலகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை புத்தகக் கண்காட்சி இடம்பெறுமென பிரதேச சபை செயலாளர் வே.சிவராசலிங்கம் அறிவித்துள்ளார். (1-207)

## திருத்தி வாசிக்கவும்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகாம்பிகை கார்த்திகேசுவின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறுகின்றன.

நேற்றைய (25.04.2008) உதயனில் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமான மரண அறிவித்தலில் விலாசம் மானிப்பாய் மேற்கு என்று தவறுதலாக அச்சாகிவிட் டது. அதனை திருத்தி வாசிக்கவும்.

## சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் "வில்லிசைக்கலை" நூல் வெளியீடு

நாளை (27.04.2008) ஞாயிறு
பி.ப. 2.30 மணிக்கு
நல்லை ஆதீனத்தில்
நடைபெறும்.ஆர்வலர்கள்
அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.
நூலின் விலை ரூபா 200/=

(73521)

# பருத்தித்துறையில் மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.26

பருத்தித்துறை இலங்கை வங்கி, சித்திரை புத்தாண்டை யொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 20ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இன்று பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

பருத்தித்துறை, இலங்கை வங்கி முகாமையாளர், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழத்தலைவர் ஆகியோர் இம்மென்பந்து துடுப்பாட்ட சுற்று ப்போட்டியை ஆரம்பித்து வைக்கின்றனர்.

இன்று காலை மைக்கல் வி.கவை எதிர்த்து சென்.சேவியர் வி.கவும் பிற்பகல் சிவசக்தி வி.கவை எதிர்த்து கழுகுகள் வி.க.வும் மோதுகின்றன.

இச்சுற்றுப் போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த கழகங்கள் பங்குபற்றுகின்றன. (1-218)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ரூத் (சரஸ்வதி) சின்னத்துரை



கோப்பாய் தெற்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட ரூத் (சரஸ் வதி) சின்னத்துரை (23.04.2008) புதன்கிழமை வத்தளையில் கால மானார்.

அன்னார் வசந்தலீலா, குணசீலன், ஜெனி, ரஞ்சனலீலா, தேவ சீலன், கருண சீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தசச்சி, அருந் ததி, மகாலிங்கம், அனோமா, மாலா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜீவன், சாயிரா, டிஷான், டினுஷா, ஜேசன், றொஷெல், ஏஞ்சல், டயானி, பிரஸ்டன், றொசான் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியள வில் New Living Flame Church (NLM), 22 A, 1st Lane, Palliawatta, Wattalaவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வத்தளை.*
T.P.060 2193372

(சி/552574)

தகவல்:
குடும்பத்தினர்

### சின்னாச்சி வைரமுத்து

வதிரி, தவமனையைச் சேர்ந்த சின்னாச்சி வைரமுத்து நேற்று (25.04.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும், திருமதி தவமலர் இராஜசிங்கம், தர்மராஜா, தங்கராஜா, வரதராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி சின்னத்தங்கச்சி, வல்லிபுரத்தின் அன்புச் சகோதரியும், இராஜசிங்கம், திருமதி உதயமலர், தர்மராஜா, திருமதி தேவாபரணம் தங்கராஜா, திருமதி சந்திரலேகா வரதராஜா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (26.04.2008) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தவமனை'*
*வதிரி.*

(C)

*தகவல்:*
தர்மராஜா (மகன்)

### சுப்பர் கணபதிப்பிள்ளை (சுகணா)



'அண்ணா இல்லம்', அல்வாயைச் சேர்ந்த சு.கணபதிப்பிள்ளை (சுகணா-ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று முன்தினம் (24.04.2008) வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னார் சுப்பர் - தெய்வானையின் மகனும், கதிராசிப்பிள்ளையின் கணவனும், நாகலிங்கம் - பார்வதிப்பிள்ளையின் மருமகனும், தமிழழகன் (லண்டன்), பூங்கோதை (நோர்வே), தமிழ்மலர் (நோர்வே), மணிமேகலை (கனடா), கனிமொழி (லண்டன்), கணேசானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி, சச்சிதானந்தம், பாஸ்கரன், [illegible]ல்வரட்ணம், பரமேஸ்வரன், மலர்ச்செல்வி ஆகியோரின் பாச[illegible]ாமனும், அமரத்துவமடைந்த வள்ளிப்பிள்ளை, பசுபதி, [illegible]ப்பிள்ளை, கந்தவனம், தங்கம்மா ஆகியோரின் உடன் பிறப்பு[illegible]ர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு எடுத்துச்செல்லப் பட்டு சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'அண்ணா இல்லம்',*
*அல்வாய்.*

(D)

தகவல்:
குடும்பத்தினர்.

### இரத்தினம் சந்திரஜெயம்

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சந்திரஜெயம் நேற்று (25.04.2008) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மூத்தாம்பி மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயக்குமாரியின் (பாமா) பாசமிகு கணவரும் டிலானி, றஜிதா, றஜிதன், றோகிலன், சங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரம், சந்திரமலா, காலஞ்சென்ற சந்திரலிங்கம் மற்றும் சந்திரகுமார், சந்திரகலா, சந்திரமலர், ஸ்ரீகாந்தன், வாசுதேவன் (கனடா), சந்திரலீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.04.2008) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

(E)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட வாழ்வில் மட்டுமன்றி அரசியலிலும் கனிவு, கண்ணியத்துடன் ஒழுகிய பெருந்தலைவர்

செல்வா ஒரு புனிதர். திருவிவிலிய மதிப்பீடுகளை இறை வாக்குகளைத் தன் மனதில் இருத்தி வாழ்ந்தவர். பணம் சம்பாதிக்கும் தொழிலாக சட்டத்தரணிப் படிப்பை மேற்கொள்ளாமல் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு வாழ்ந்தவர். ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் நீதி கிடைக்க சாதாரண பயணிகள் பயணிக்கும் பேருந்து வண்டியிலேயே வந்து மல்லாகம் நீதிமன்றிலே வழக்காடிய எளிமையான காட்சிக்கு இன்னும் உயிரோடிருப்பவர்கள் சாட்சி.

குற்றவியல் வழக்கறிஞராக மாறிக் குற்றவாளிகளை தப்புவிக்கும் முயற்சியிலே ஈடுபடாமல் குடியியல் வழக்குகளிலே தன்னை ஈடுபடுத்தி நேர்மையான வழக்கறிஞராக செயற்பட்டு நீதியை நிலைநாட்டியவர். நடுவர் ஆவதற்கு விரும்பாதே அநீதியை நீக்க உன்னால் இயலாமல் போகலாம், வலியவருக்கு அஞ்சி உன் நேர்மைக்கு இழுக்கு வருவிக்கலாம். என்ற சீராக் நூலின் 7ஆம் அதிகாரம் 6ஆவது திரு வசனத்தை என்றுமே தியானித்தவராய் நீதியாளர் பதவியை ஏற்காமல் இறுதிவரை ஒடுக்கப்பட்ட மக்களுக்காய் வாழ்ந்தவர். தம் சிலுவையை சுமக்காமல் என்பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது என்ற லூக்கா 14:27 திருவசனத்தை மனதிலிருத்தி உயிர்துறக்கும் வரை எவ்வித முணுமுணுப்பும் இல்லாமல் தனது அரசியல் வேதனைகளையும் உடல்


இஸ்லாமிய, கத்தோலிக்க மத மக்கள் அனைவரையும் கவர்ந்ததோடு வடக்கு-கிழக்கு, வன்னி, மலையகம், கரையோரம் என்ற பிரதேச வேறுபாடுகளை அகற்றியவராய் சாதி, சமூக வேறுபாடுகளை ஒழிக்கும் புரட்சி வீரராய்த் திகழ்ந்தார்.

சேர்.பொன் இராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்றவர்கள் காலத்தில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வேளையில், இஸ்லாமியக் கரையோரத் தமிழர் காட்டிக் கொடுக்கப்பட்ட வேளையில், தோன்றிய தமிழ் காங்கிரஸில் இணைந்து தமிழ் சமூகத்தின் நல்வாழ்விற்காய் வாழ்வை அர்ப்பணித்தார். 1949இல் தமிழினத்தின் பிரிக்க முடியா அங்கமான மலையகத் தமிழர்களின் குடியுரிமை மறுக்கப்பட்டபோது அச் சமூகத்தின் நல்வாழ்விற்காய் குரல் கொடுத்தார். சமூக அநீதிக்கு துணை போகமாட்டேன் என்ற திடசங்கற்பம் பூண்டு தான் சார்ந்த அரசியல் கட்சியைத் தூக்கியெறிந்தார். அன்றைய அரசியல் பார்வையில் அது தந்தை செல்வாவின் அரசியல் தற்கொலை என்று அது வர்ணிக்கப்பட்டது. 1952 தேர்தலில் அவரது தோல்வியினால் அது உறுதியெனப்பட்டது. ஆனால் தந்தை செல்வாவின் கூர்மையான சமூகப் பார்வை, சமூக மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பு 1956இல் அவரையும் அவரது தமிழரசுக் கட்சியையும் தமிழினத்தின் ஏகப்பிரதிநிதிகளாக அன்றைய நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தது.

1970 தேர்தலில் உடுப்பிட்டிச் சிங்கமென வர்ணிக்கப்பட்ட அன்றைய உபசபாநாயகர் திரு.மு.சிவசிதம்பரத்தை மண் கவ்வ வைத்ததும் தந்தை செல்வாவின் அரசியல் சாணக்கியமே. கதிரைகளை வீசி அடித்தும், ஒலிவாங்கிகளைப் பிடுங்கி எறிந்தும் சபாநாயகரின் செங்கோலைப் பறித்துக்கொண்டும், நெருப்புக்கொழுத்தியும், சமய குருமாரைத் தாக்கியும் வரும் இந்தச் சிறிலங்கா நாடாளுமன்ற பாரம்பரியத்தில், சபை அடங்கி அமைதியோடு குறுக்கீடில்லாமல் பேச்சைக் கவனமாகக் கேட்டதென்றால் அது எப்பொழுதும் தந்தை செல்வா எழுந்து பேசியபோதுதான். எப்பொழுதும் உண்மைக்குப் புறம்பாகப் பேசாதவர், தகாத சொற்களைப் பாவியாதவர், எவரது மனதையும் புண்படுத்தாமல் பேசியவர் என்றால் தந்தை செல்வாவேதான்.

### பேச்சுக்கு எப்போதும் தயார்

எந்த வேளையிலும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்தார். விட்டுக்கொடுப்புகளைச் செய்தாலும் தமிழர் தாயகக் கோட்பாட்டை இன்றைய தலைமுறைக்குச் சொத்தாக விட்டுச்சென்றவர். சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர்களுக்கு எதையும் கொடுக்கத் தயாரில்லை என்பதைத் தந்தை செல்வாவின் அரசியல் ஞானம்தான் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது. அதுமட்டுமல்ல எமக்கு இந்த உண்மையை, வரலாற்றுச் சான்றுகளை விட்டுச்சென்றுள்ளார்.



காங்கிரஸ் கட்சியின் ஒரே பிரதிநிதி மு.சிவசிதம்பரம் அவர்கள் தந்தை செல்வாவின் சாத்விகப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. தமிழ் தேசத்தின் முதலாவது தபால் சேவையை ஆரம்பித்து முத்திரையையும் வெளியிட்டு வைத்தார். 1964இல் சி.பி.டி.சில்வா போன்றோர் அரசைவிட்டு வெளியேறியபோது அரசிற்கு முட்டுக்கொடுக்காமல் சிறிமாவோ அரசைக் கவிழ்த்தார். 1965 இல் யு.என்.பி. மீண்டும் பலவீன அரசாக அமைந்தபோது தமிழர் அபிலாஷைகளை முன்வைத்த அந்த அரசோடு ஒப்பந்தம் செய்துகொண்டார். அதுவும் 1969இல் முறிந்தது. வடகிழக்கில் நீதிமன்றங்களில் தமிழ் நிர்வாக மொழிபோன்ற விடயங்கள் அடங்கிய தமிழ்மொழி விஷேட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது சிங்கள பௌத்தம் வெறி வெளிப்பட்டது. பௌத்த மதகுருக்கள் தமிழர்களுக்கு எதுவும் அற்ப சொற்ப உரிமைகள் கூட கொடுக்க விடமாட்டார்கள் என்ற சான்றை மீண்டும் ஆவணப்படுத்த வைத்தது தந்தை செல்வா என்ற பலவீனமான பலசாலியின் சாணக்கியத்தால்தான்.

இறுதியாக பலவீனமான இந்த மனிதர், அமரர்கள் ஜீ.ஜீ.பொன்னம்பலம், தொண்டமான் போன்றோரின் இணக்கப்பாட்டுடன், தமிழினத்தின் எல்லோரினதும் உடன்பாட்டுடன்தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி வட்டுக்கோட்டை மாநாட்டிலே தமிழ் ஈழப் பிரகடனத்தைச் செய்து தமிழர்கள் தங் கள் தாயகத்தைப் பெறுவதைத் தவிர வேறு



அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் (அமரர்)

## தமிழர் தாயகக் கோட்பாட்டுக்கு வித்திட்டவர் அவரே

வேதனைகளையும் தாங்கினார். உங்களுக்குள் தம் உடமையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்கமுடியாது என்ற தேவ வாக்கை மனதில் இருத்தி தனது மலேசியச் சொத்துக்கள் தனது உழைப்பின் ஊதியங்களையெல்லாம் துன்புறும் தம் சகோதரருக்காய் இழந்தவர் தந்தை செல்வா. எப்பொழுதும் அமைதிக்கான வழி தேடினார். பலவிட்டுக் கொடுப்புக்களைச் செய்தார். கனிவோடு பேசினார். பணிவோடு செயற்பட்டார். மற்றவருக்குச் செவி சாய்க்கு முன்பே மறுமொழி செய்யாதே, அடுத்தவர் பேசும் போது குறுக்கே பேசாதே என்ற சீராக் நூலின் அதிகாரம் 11:8 ஆம் திருவசனத்தை வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தனிப்பட்டவர்களுடனும் பேசும்போதும், நீதிமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் முறையாகக் கடைப் பிடித்தார். அதிகார வெறி, சினம், கையூட்டல், காமக் கேளிக்கை, கலகம், பேராசை, எதுவுமில்லாத எளிமையான புனிதராக வாழ்ந்த அவரை, அவரது வாழ்வை, கிறிஸ்தவ திருச்சபைகள் எதிர்காலத்தில் பொது வாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு முன் மாதிரிகையாக ஒரு வழிகாட்டியாக முன் வைக்காத காரணத்தால் தந்தை செல்வாவிற்கு பிறகு பொது வாழ்வில் கிறிஸ்தவர்கள் எவரும் தலைமைத்துவத்தைப் பெற முடியாமற் போனதும் இது கிறிஸ்தவ சபைகளுக்கு ஒரு சாபக் கேடாகவும் சவாலாகவும் இன்றைக்கு இருக்கின்றது என்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

### ஒரு தலை சிறந்த சமூகவியலாளர்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பௌத்த இந்து சமயச் சீர்திருத்தங்கள், தீவிரப் போக்கையடைந்தபோது முன்னாள் பிரதமர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜயவர்த்தனா, டி.எஸ்.சேனநாயக்கா, ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்களின் குடும்பங்கள் அங்கிலிக்கன் திருச்சபையை விட்டு விலகின. அங்கிலிக்கன் திருச்சபையின் நெறிதவறா விசுவாசியாக தந்தை செல்வா விளங்கி, சகல இன மத மக்களைக் கவர்ந்திருந்தார். இந்து,

பண்டாவை செல்வாவோடு ஒப்பந்தம் செய்ய வைத்தது.

சாதிவெறி பிடித்த தமிழ் சமூகப் பார்வையை சிதறடிக்க, எவரது மனதையும் புண்படுத்தாது விடுதலை என்ற போர்வையில் தீமை செய்யாதீர்கள் என்ற 1 பேதுரு 2:16 வாக்கியத்தை கடைப்பிடித்து சம பந்தி போசனப் போராட்டங்களையும் ஆலய பிரவேசப் போராட்டங்களையும் எவ்வித பலாத்காரங்களுக்கும் இடங்கொடுக்காது நடத்தி வெற்றிகொண்டார்.

1972இல் புதிய இலங்கை குடியரசு அரசியல் யாப்பினை நிராகரித்து நாடாளுமன்றப் பதவியை துறந்தார் தந்தை செல்வா. பின்னர் ஏற்பட்ட காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலில் புதிய யாப்பினை தமிழ் மக்கள் நிராகரிக்கும் ஒரு கருத்துக் கணிப்பாக வைத்து தேர்தலில் போட்டியிட்டார்.

### அரசியல் ஞானமும் தீர்க்க தரிசனமும்

1949இல் பெடரல் கோட்பாட்டு அரசியல் கட்சியை அவர் தோற்றுவித்தது, அவரது அரசியல் ஞானத்தையும் தீர்க்க தரிசனப் பார்வையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. தந்தை செல்வாவை காற்சட்டைக் காந்தி, செவிடர், சம்மட்டியால் அடி வாங்கித் தந்த சமஷ்டிவாதி என்றெல்லாம் அவரது அரசியல் போட்டியாளர்கள் இகழ்ந்த போதெல்லாம், அமைதியாகப் பலவீனமான குரலில், தளர்ந்த அசைவில் தன் இலட்சியத்தை முன்னெடுத்தார். தமிழ் சமூகத்தின் உயர்ந்த சாதியத்தின் திமிரில் அதிகார வெறிகொண்டவர்களின் முன் சாந்தமான செம்மறியாக நின்றார். 1956இல் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி முன்றலில் திரு.வி.என்.நவரத்தினத்தின் தேர்தல் பிரசாரத்திற்காக வந்து மேடையில் அமர்ந்த போது, வெறியர்களால் மேடை கவிழ்க்கப்பட்டபோதும் எழுந்து சாந்தமாகவே பேசினார். அவருடைய பொறுமையினால் அன்றைய அமைச்சர் குமாரசாமியை எதிர்த்துப் போட்டியிட்ட சட்டக்கல்லூரி மாணவன் இளைஞன் வி.என்.நவரத்தினத்தைத் தேர்தலில் அமோக வெற்றி ஈட்டச் செய்தார்.

### இத்தீவில் இரண்டு தேசங்கள் உண்டென்று ஒப்புக்கொள்ள வைத்தவர்

பண்டாவால் பௌத்த காடைத்தனத்திற்கு அடிபணிந்து ஒதுதலைப்பட்சமாகப் பின்னர் கிழித்தெறியப்பட்ட தமிழர் தாயகக் கோட்பாட்டை சிறிலங்காவின் பிரதமரால் ஒப்பந்தமாக ஏற்கவைத்தார். இதுவே இன்று விடுதலைப்போராக மாறிய தமிழர் வரலாற்று வெற்றிக்கு அடிகோலியது. 1958இன் இனக்கலவரம் தமிழர்களை அவர்களது தாயகத்திற்கு அனுப்பும் ஒரு சிங்கள நாட்டின் முயற்சி. இத்தீவில் இரண்டு தேசம் என்ற உண்மையை உலகம், ஒப்புக் கொள்ள வைத்தது.

பதவியில் அமர்ந்து, அடாவடித்தன அரசியல் செய்ய முயன்றபோது முழு வடக்கு-கிழக்கு மட்டுமல்ல, நீர்கொழும்பு வரையான தமிழர் தாயகப் பகுதியெல்லாம் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் 3 மாதங்கள் சிறிலங்காவின் நிர்வாக இயந்திரத்தை முடங்கவைத்தார். அவ்வேளையில் தமிழர்

## சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஈரானின் நிதியுதவியில் நவீன மயமாகின்றது

கொழும்பு, ஏப்.26

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைத்து நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசந்த டி மெல் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

3 வருட காலத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ள இத்திட்டத்திற்கான மொத்த செலவினத்தில் 70 வீதத்தை ஈரானிய அரசு பொறுப்பேற்றுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படுவதோடு தற்போதைய சுத்திகரிப்புத் திறன் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். எண்ணெய் இறக்குமதிக்காக இலங்கை வருடா வருடம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வருகிறது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைத்து நவீனமயப்படுத்துவதன் மூலம் இச்செலவை பெரிதும் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் விலை இந்த மாதத்தில் அதிகரிக்கப்படமாட்டாது. எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து சமையல் எரிவாயு விநியோகத்திலும் கூட்டுத்தாபனம் ஈடுபடவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நாளைமறுதினம் இலங்கை வரவுள்ள ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமதி நிஜாத் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நேரில் விஜயம் செய்யவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(சி)




வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் விசேட விலைக்கழிவு

பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள், பேப்பர் வகைகள் உட்படப் பல பொருள்கள்

யாழ். மொத்த விலையில் 20% - 30% வீதக் கழிவு விலையில் (கொழும்பு விலையில்) பெற்றுக்கொள்ளலாம்.

"போல்கோ" 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

முழுமையாக விற்றுத் தீர்த்தல்! உடன் விரையுங்கள்....!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்- 2007

1. வணிக முதற் தேர்வு -2006
2. வணிகமாணி பகுதி - I- 2005 & 2006
3. வணிகமாணி பகுதி -II- 2004 & 2005
4. வணிகமாணி பகுதி -III- 2004

மேற்படி பரீட்சைகளை 21.05.2008 (புதன்கிழமை) தொடக்கம் 25.06.2008 (புதன்கிழமை ) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வணிக முதற் தேர்வு -2006 | 21.05.2008- 30.05.2008 |
| வணிகமாணி பகுதி - II- 2004 & 2005 | 02.06.2008- 07.06.2008 |
| வணிகமாணி பகுதி -I- 2005 & 2006 | 09.06.2008- 16.06.2008 |
| வணிகமாணி பகுதி -III- 2004 | 17.06.2008- 25.06.2008 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவனைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 14.05.2008 (புதன்கிழமை, தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
24.04.2008.

(சி/552571)


# சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்துக்கு ஆசிய மனித உரிமை ஆணைக்குழு அதிருப்தி

கொழும்பு, ஏப்ரல் 26

சர்வதேச பிரசித்தி பெற்ற நபர்களின் குழு வெளியிட்ட கருத்துக்களிற்கு இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் பதிலளித்துள்ள விதம் குறித்து ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் குற்றச்சாட்டுகளிலிருந்து அரசைப் பாதுகாக்கும் விதத்தில் நடந்துகொண்டுள்ளதாகவும் அது குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச பிரசித்திபெற்ற நபர்களின் குழு வெளியிட்ட பரிந்துரைகள் குறித்து இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் வெளியிட்ட கருத்துகள் இலங்கைக்கு அவமானத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ள அந்தக் குழு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சர்வதேச பிரசித்திபெற்ற நபர்களின் சுயாதீன குழு வெளியிட்ட கடும் குற்றச்சாட்டையும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக அது இலங்கையிலிருந்து வெளியேறியதையும் சட்டமா அதிபர் திணைக்களம் இலங்கைக்கு மனித உரிமை கண்காணிப்பாளர்களைக் கொண்டுவருவதற்கான சதி என வர்ணித்துள்ளது.

சாதாரண சூழ்நிலைகளில் சட்டமா அதிபர் திணைக்களம் சர்வதேச குழுவின் குற்றச்சாட்டின்தன்மையை அரசிற்கு தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கியிருக்க வேண்டும்.

மேலும் சட்டமா அதிபர் திணைக்களம் சர்வதேச பிரசித்தி பெற்ற நபர்களின் குழு வின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு அரசிற்கு ஆலோசனைகளை வழங்கியி ருக்க வேண்டும். இதன் மூலம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை பலப்படுத்திருக்க உதவியிருக்கலாம்.

எனினும் சட்டமா அதிபர், சட்டத்தின் ஆட்சி குறித்து கவலையடைவதற்குப் பதில், சர்வதேச குழுவின் விமர்சனத்தால் உருவாகக்கூடிய பாதிப்பை கட்டுப்படுத்த முனைந்துள்ளார்.

காணாமல் போனோர் விடயத்திலும் வேறு தந்திரோபாயத்தை பின்பற்றியது, மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்ட சம்பவங்களில் கூட சட்டமா அதிபர் திணைக்களம் எதனையும் செய்யவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்திற்குள் உள்ள விசேட குழுவொன்று இவ்விடயங்களை கையாளும் என தெரிவிக்கப்படுகின்றபோதிலும், எனினும் ஒரு சில சம்பவங்களே பதியப்பட்டன என்று உள்ளது.

## தெரிவுக்குழு கூடுகிறது

கொழும்பு, ஏப்ரல் 26

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் நிலவும் குறைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு அடுத்த மாதம் 21 ஆம் திகதி கூடவுள்ளது என்று அதன் தலைவரும் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

இந்தத் தெரிவுக்குழுவின் கூட்டம் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய பிற்போடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

தெரிவுக்குழு கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடியவேளை 17 ஆவது திருத்தத்தில் நிலவும் குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்ள பல யோசனைகள் முன் வைக்கப்பட்டன. அந்த யோசனைகள் மற்றும் பிரேரணைகள் யாவும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவைபற்றி அடுத்த கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும். அத்துடன் எதிர்வரும் கூட்டத்தில் அனைவரினதும் அங்கீகாரம் கிட்டுமாயின் தெரிவுக்குழு அறிக்கையை விரைவாக நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது சமர்ப்பிக்க முடியும். - என்றார். (சி)

## ஜே.வி.பி. எம்.பியின் பாதுகாப்பு குறைப்புக்கு ஆட்சேபம்

கொழும்பு, ஏப்ரல் 26

ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகரவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை ஒரு அரசியல் சதியென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. ஜயந்த விஜேயசேகரவிற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மீண்டும் வழங்கப்படவேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பணிகளை முடக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததனைத் தொடர்ந்து அவரது பாதுகாப்பைக் குறைத்து அதன் மூலம் அவரது செயற்பாடுகளைப் பலவீனப்படுத்த அரசு முனைகின்றது என ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## ஸ்ரீமதி நகுலமீரா சிதம்பரநாதன்



உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீமதி நகுலமீரா 21.04.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நவரத்தினத்தின் (CTB மணியம்) சிரேஷ்ட புத்திரியும் திரு. திருமதி பொன்னையாவின் அன்பு மருமகளும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிதம்பரநாதனின் (குமரன் வைன் ஷொப், கல்வியங்காடு), அன்பு மனைவியும், நாகப்பிரபா, சித்திராரூபி, ஷாமினி ஆகியோரின் பாசமிகு தாயும் கிரிந்தன், சுகிதன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஆதித்தனின் அன்பு அம்மம்மாவும், செல்வரத்தினம், கனகலிங்கம் ஆகியோரின் பெறாமகளும், கைலாயபிள்ளை- சரோஜினி தேவி தம்பதியரின் மருமகளும் ராதா, மாலா, சக்ராயுதர், கீதா ஆகி யோரின் அன்பு அக்காவும் திருமதி இராசமலர் கந்தசாமி (மைனா) காலஞ்சென்ற ஜீவரட்ணம், திருமதி சுசிலாதேவி சண்முகநாதன், க.தா.சிவகுருநாதன் (சுடர் ஒளி) ரவீந்திரன், ஸ்ரீவாசுதேவன் ஆகி யோரின் மைத்துனியும், திருமதி ஜீவரட்ணம், ராசலட்சுமி, திரு மதி நர்மதா சோதிலிங்கம், திருமதி கௌரிவாசதேவன் ஆகி யோரின் சகோதரி முறையானவரும், ராதா, பிரேமாநிரஞ்சன், மோகனதாஸ், விஜயதாஸ், சற்குணராசா, செல்வமலர் ஆகியோ ரின் மாமியும் ஜீவதாசன், ஜீவராசன், ஜீவரேகா, ஜீவவத்சல, ஜீவகௌரி, ஆகியோரின் சித்தியும் துஷாந்தி, லாவர்ணன், சுதன் அபராஜிதன், சுதேசனா, நர்த்தனா, கீர்த்திக், மூலிஷன், கார்த்திகேயா, விஷாரதன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.04.2008 சனிக்கிழமைகாலை 9.00 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24 5/1 இனிசியம் றோட்,
தெஹிவளை.
தொ.பே.இல.: 2732481

தகவல்:
பொ. சிதம்பரநாதன்.

(சி/552563)

## கந்தவனம் குணலிங்கம்

### (ஓய்வுபெற்ற மருந்தாளர்)



சாந்தி நிலையம், கரணவாய் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் குணலிங்கம் அவர்கள் நேற்று (25.04.2008) வெள்ளிக்கிழமை காலை 6 மணிளயவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணலிங்கம் தவமணியின் அன்புக் கணவரும் திருமதி பாஸ்கரன் சாந்தினி (சுவிஸ்), திருமதி ஞானரூபன் சாமினி (சுவிஸ்), கு. சபேசன் (சுவிஸ்), கு.சத்தியன் (சுவிஸ்) கு.சதீஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தவனம் நாகலிங்கத்தின் (உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க தலைவர், J.P.) அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நடராசா கந்தையா மற்றும் நடராசா ஞானசேகரம் (சுவிஸ்), ந. புஸ்பநாதன் (சுவிஸ்), ந. ரவீந்திரன் (சுவிஸ்), ந. யோகநாதன் (சுவிஸ்), ந. குலேந்திரன் (கனடா), ந. தங்கத்துரை (சுவிஸ்), ந.ராசேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2008) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் எள்ளங்குளம் இந்து மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நாகலிங்கம்
(சகோதரன்).

சாந்தி நிலையம்,
கரணவாய் மத்தி.

(சி/552568)


## தூய போல் கலைக்கழகம்
### தயாரித்து வழங்கும்
## அமைதியின் தெய்வம் (பாகம் - 1)
## இறுவட்டு வெளியீட்டு விழா

காலம்: இன்று (26.04.2008) சனிக்கிழமை மாலை 3.30 மணி

இடம்: புனித யாக்கோபு ஆலய மண்டபம், நல்லூர்.

### நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* இறை வேண்டலும் வரவேற்புரையும்
  அருள்பணி அ.ஸ்ரீபன் (புனித யாக்கோபு ஆலயம், நல்லூர்)
* தலைமையுரை - திரு.எஸ்.புத்திசிகாமணி
* வெளியீட்டுரையும் இறுவட்டு வெளியீடும்
  அருள்பணி எஸ்.ரி.நேசகுமார்
  (யாழ்.குருமுதல்வர், இலங்கைத் திருச்சபை)
* பிரதிகள் வழங்கல்
* மதிப்பீட்டுரை- இசைத்தென்றல் திரு.ம.யோசுதாசன்
  (இசைத்துறைப் பொறுப்பாளர், திருமறைக் கலாமன்றம்)
* சிறப்புரைகள்
  அருள்பணி எஸ்.எயின்சிலி றொஷான்
  (யாழ்.ஆயரின் செயலாளர், பிரதம ஆசிரியர் - பாதுகாவலன்)
  திரு.எம்.ஞானப்பிரகாசம்
  (அதிபர், யா/சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்)
* கலைஞர்கள் கௌரவிப்பும் பிரதம விருந்தினர் உரையும்
  பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
  (முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
* ஏற்புரை - அருள்சகோதரன் வி.ரி.தவேந்திரா
* நன்றியுரை - திருமதி ஹேமா தூயகுமாரன்

நடைபெறும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(73510) தூயகுமாரன் குடும்பத்தினர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திரு.ப. இரத்தினபூபாலன் அவர்களின் தாயார்

### திருமதி தங்கம்மா கந்தையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை,
கொக்குவில்.

## கண்ணீர் அஞ்சலி

### அருட்திரு எம்.சேவியர் கருணாரட்ணம் (கிளி) அடிகளார்



இறைமனித உறவின்
இனிய தொடர்பாடல் கருவியே!
திட்டமிட்டு திறம்பட நிர்வகித்து
கட்டுக்கோப்புடன் கடவுள்பணி புரிந்த
கருணையின் ரத்தினமே!-எம்
பங்கு மக்களின் மனங்களில்
மறக்கவொண்ணா சேவை புரிந்த
இனிய சேவகனே!
எத்தனை காலமானாலும் உம்மை
நாம் மறவோமையா.......

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று (26.04.2008) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இளவாலை புனித யூதாததேயுஆலய
பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.

(73517)


## ORENDAL AQURIUAM
### விற்பனைக்கு

பல வகையான வளர்ப்புக் கலர்மீன்களும், வெளிநாட்டு வளர்ப்புக் குருவிகள், மற்றும் புறோயிலர் இறைச்சிக் கோழிகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரியாம்
61, இராமநாதன் வீதி (கலட்டி),
திருநெல்வேலி முடிவு வீதி.
T.P (0774007202)

(73518)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணத்திலுள்ள சுதேச மருத்துவர்கள் பதில் கடமைக்கும் செல்லவேண்டும்

## வடமாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.26

வட மாகாணத்தில் இயங்கி வரும் சுதேச மருத்துவ நிலையங்களில் (ஆயுள் வேத வைத்திய நிலையங்கள்) சேவையாற்றி வரும் மருத்துவ உத்தியோகத்தர்கள் அனைவரும் குறிப்பிட்ட நிலையத்தில் சேவைபுரியும் மருத்துவ உத்தியோகத்தர் விடுமுறையில் செல்லும்போது அவருக்காக பதில் கடமை புரியச் செல்லவேண்டும். இவ்வாறு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் மாகாணத்தில் செயற்பட்டுவரும் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள சுதேச மருத்துவ நிலையங்கள் மற்றும் உள்ளூராட்சி நிலையங்களில் இயங்கிவரும் ஆயுள்வேத நிலையங்களில் பெரும்பாலும் தலா ஒரு மருத்துவ உத்தியோகத்தரே சேவைபுரிந்து வருகிறார். குறிப்பிட்ட நிலையத்தில கடமைபுரியும் இம்மருத்துவ உத்தியோகத்தர் விடுமுறையில் செல்லும்போது மேலதிகமாக மருத்துவர்களைக் கொண்டுள்ள மருத்துவ நிலையங்களில் இருந்து பதில் கடமைக்காக மருத்துவர்களை விடுவிக்க வேண்டும்.

இதற்கு சேவைமூப்பு எனும் விதிவிலக்கு கவனிக்கப்படக்கூடாது. சகல மருத்துவ உத்தியோகத்தர்களும் பதில் கடமைக்குச் செல்லவேண்டியது அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (202-300)

# கிராம மட்ட சங்கங்கள் அனைத்தும் பிரதேச சமாசத்தில் இணைதல் அவசியம்

## மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.26

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் உட்பட்ட கிராமங்களில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அனைத்தும் பிரதேச மட்டத்தில் சமாசத்தில் இணைதல் அவசியம்.

கிராம அபிவிருத்தி சம்பந்தமான ஒழுங்கமைப்புக்கேற்ப எல்லாப் பிரதேச செயலக பிரிவுகளிலும் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து பிரதேச மட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களாக சமாசம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இவ்வாறு வட மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் வ.குமாரசிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் 2007ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதிய யாப்பு விதிகளுக்கமைய அமைக்கப்பட்ட சங்கங்களைக் கொண்டு பிரதேச மட்ட சமாசம் அமைக்கப்படவேண்டும். இதற்கென 02.01.2001இல் உருவாக்கப்பட்ட யாப்பு விதியும் அது தொடர்பான சுற்றறிக்கையும் மறுசீரமைக்கப்பட்டு 01.01.2008 முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் யாப்பு வெளியிடப் பட்டுள்ளது.

தற்சமயம் பதிவு செய்யப்பட்ட சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பிரதேச மட்ட சமாசங்களைச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு செயற்படுத்தும் சங்கங்களுக்கே அரசின் உதவிகளும் ஏனைய சலுகைகளும் கிடைக்கும் உரித்துடையது என குமாரசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (202-111)

# நவாலியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.26

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்குட்பட்ட பகுதியில் மழையால் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின் றது.

இதன் முதற்கட்டமாகக் கானல்பயிர்ச் செய்கையில் பாதிக்கப்பட்டு விவரம் திரட்டப்பட்ட விவசாயிகளுக்கு பதிவு இலக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படவுள்ளது.

சம்மேளனச் செயலர் ப.செல்வகுமரன் இவ்விலக்கங்களை வழங்கவுள்ளார்.

அன்றைய தினம் நவாலி வடக்கு, நவாலி தெற்கு, நவாலி கிழக்கு பகுதி விவசாய உறுப்பினர்கள் தமது இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நவாலி மகா வித்தியாலயத்தில் வைத்து இலக்கங்கள் வழங்கப்படும் என்றும் இந் நிகழ்வில் சண்டிலிப்பாய் பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஷ்ணன் கலந்து சிறப்பித்தார். (202-95)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# நவாலிப் பிரதேசத்தில் பட்டப் பகலில் பெண்ணின் காதை அறுத்து தோடு அபகரிப்பு

## மேலும் பல நகைகளும் கொள்ளை

நவாலி,ஏப்.26

நவாலியில் பட்டப்பகல் வேளையில் பெண் ஒருவரின் காதுகள் அறுக்கப்பட்டு தோடுகள் அபகரிக்கப்பட்டதுடன் அவர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு என்பனவும் பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

கொழும்புத்துறையிலிருந்து இடம் பெயர்ந்து நவாலி, சங்கையான் வீதியில் சிலகாலம் வசித்துவந்த 55 வயது பெண் ஒருவரும் அவரின் 25 வயதுடைய மகளும் தனித்திருந்த வேளையில் பிற்பகல் 2.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரில் மூவர் உள்ளே நுழைந்தனர் என்றும் -

இதில் ஒருவர் மகளின் வாயையும் மற்றையவர் தாயாரின் வாயையும் பொத்திப் பிடித்தவாறும் மூன்றாமவர் வெளியில் காவல் காத்தவாறும் நிற்க நான்காம் ஆள் மாது அணிந்திருந்த சங்கிலி, காப்பு என்பவற்றை பறித்தெடுத்ததுடன் அவர் அணிந்திருந்த காதுத் தோடுகளை காதை அறுத்து எடுத்தபின் தலைமறைவாகிவிட்டார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் பயம் காரணமாக இவர்கள் போட்ட கூச்சலைத் தொடர்ந்தே அப் பகுதியிலுள்ளவர்கள் அங்கு சென்று நடந்தவற்றை அறிந்துகொண்டனர். (202-100)

# உலர் உணவுப் பொருள்கள் விநியோகம்

வலிதென்மேற்கு,ஏப்.26

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் சமுர்த்தி நிவாரணம் பெறும் 5 அங்கத்தவர்கள் அல்லது அதற்கு மேலும் அங்கத்தவர் உள்ள 600 குடும்பங்களுக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் உலர் உணவுப் பொருள்களை கடந்த வாரம் வழங்கியுள்ளது.

சங்கத்தின் மானிப்பாய்க் கிளை 11இலும், சண்டிலிப்பாய் கிளை 13 இலும் வைத்து அரிசி, மா, சீனி ஆகியன வழங்கப்பட்டிருப்பதாகச் சங்கப் பொதுமுகாமையாளர் நா.துரைசாமி தெரிவித்தார். (202-135)

# சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு நிரந்தர கால்நடை வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஏப்.26

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர கால்நடை வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்து தருமாறு இப்பிரதேசத்திலுள்ள கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பல மாதகாலமாக உடுவில் கால்நடை வைத்திய அதிகாரியே இங்கு வந்து சிலமணிநேரம் பதில் கடமையாற்றி வருகின்றார். இதனால் கால்நடைகளின் அவசர நோய்களுக்கு சிகிச்சையை உரிய நேரத்தில் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே இப்பணிமனைக்கு நிரந்தர கால்நடை வைத்திய அதிகாரி ஒருவரை விரைவில் நியமனம் செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவி பணிப்பாளருக்கு இது தொடர்பாக இப்பிரதேச பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கடித மூலம் அறிவித்துள்ளனர். (202-135)

# உரும்பிராய் கனடியர்கள் குழுமம் நூல்கள், தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலக நூலகத்திற்கு உரும்பிராய் கனடியர்கள் குழுமம் ஆயிரத்து 400 நூல்களையும் ஒரு தொகுதி தளபாடங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

உலக புத்தகத் தினத்தை முன்னிட்டு நூலகரின் கோரிக்கைக்கு ஏற்ப உரும்பிராய் பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

# யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி கற்கைநெறிக்கு 53 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி பட்ட கற்கைநெறி 2007/2008 (தொகுதி VII) இற்கு 53 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவை மூலம் இத்தெரிவு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

அப்புத்துறை ஆனந்தராஜா, ஆறுமுகம் அன்ரன் போல், பரமேஸ்வரராசா அருந்தவம், செல்வரட்ணம் பாஸ்கரன், சண்முகராஜா பாஸ்கரன், பொன்னையா சந்திரகுலசிங்கம், ஞானசக்தி கணேசாணந், சதாசிவம் கணேஸ்வரன், சுலபமதி ஞானலிங்கம், கந்தன் கணபதி,

கமலாவதி கந்தசாமி, ஆறுமுகம் கதிர்காமநாதன், கிட்ணபிள்ளை கிருஸ்ணகுமார், ராமநாதன் குணநாதன், அம்பலவாணர் லோகநாதன், சொர்ணலிங்கம் லோகேஸ்வரன், அலோசியஸ் மிலோறி கிறிஸ்ரி மகேந்திரன், ராஜினி மங்களேஸ்வர சர்மா, ராமலிங்கம் மன்மதராஜன், திருமதி றோசலின் செல்வமகள் மோகனதாஸ்,

சிதம்பரம் நாகராஜா, வன்னித்தம்பி நந்தீஸ்வரன், ராசதுரை நவகேதீஸ்வரன், முத்துக்கிருஷ்ணன் பிரபாகர், நாகரட்ணம் ராஜன், நடராஜா சபாரட்ணசிங்க, கந்தசாமி சரவணபவன், மகாலிங்கம் சத்தியகுமார், சுப்பிரமணியம் சயந்தன், சதானந்தன் செல்வானந்தன்,

பாலசிங்கம் சண்முகநாதன், திருமதி சிவசுபைதா சிறிகணேசன், லிசி அன்ரோனிற்றா சுபத்ரா சிவலிங்கம், நவரட்ணம் சிவலிங்கம், திருமதி சகுந்தலாதேவி சிவலிங்கம், உலகநாதபிள்ளை சிவநாதன், திருமதி சாருலதா சிறிஸ்குமார், திருமதி சுமதி சிறிசுந்தரராஜா, குசேலவன் சுவேந்திரன், ரட்ணம், தமிழ்மாறன்,

சௌதாயினி தர்மலிங்கம், தளையசிங்கம் தவசேகர், திருநாவுக்கரசு தீபன், ஐயம்பிள்ளை தவகிருபாகரன், ஐயாத்துரை தேவராஜன், சிங்காரம் திவாகரன், கணேஸ் உதயரூபன், முருகேசு வரதராஜன், திருமதி பிரபாலினி வரதராஜன், குருசாமி விமலன், திருமதி நிமலாதேவி விமலநாதன், திருமதி ஞானசெல்வி விநாயகமூர்த்தி, நற்குணராஜ விபுலன். (202-267)




கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' சிறுவர் சேமிப்புத் திட்டத்தின்கீழ் 2007இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு நன்கொடை, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுன்னாகம் கிளையில் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை ரீதியில் முதல் பரிசைப் பெற்ற சி.பிரதீஸ்வரனுக்கும் (இணுவில் இந்துக் கல்லூரி), தே.லுஷீரதனுக்கும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்) கிளை முகாமையாளர் இ.குலேந்திரன் சான்றிதழ் வழங்குவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

பாடசாலை ரீதியாக முதல் மூன்று இடங்களில் சித்தியடைந்த மாணவர்களான (இடமிருந்து வலமாக) சி.பிரதீஸ்வரன், யோ.ரவிதர்ஷன், தே.லுஷீரதன், ம.தரண்யா, க.தனுஷிகா, மோ.சாரினி, த.ஜனித்தா ஆகியோரையும் வங்கி உத்தியோகத்தர்களையும் மூன்றாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 ★ 12 ★ 1932



மறைவு 27 ★ 03 ★ 2008

## செல்வி டயானா சகுந்தலா சபாபதிப்பிள்ளை

உமது ஆத்மா சாந்தியடைய இறைமகன் இயேசுவைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 27.03.2008 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புச் சகோதரியின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் தொலை பேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த குருமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'ஜோய்லின்',
உடுவில் வீதி,
மானிப்பாய். (73399)

இராஜேந்திரா சபாபதிப்பிள்ளை,
விமலா சபாபதிப்பிள்ளை,
(சகோதரர்கள்).

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

# சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்,

சர்வசித்து ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தோராம் நாள் (03.04.2008) அதிகாலை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

(யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளரும் (முன்பள்ளி), இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கத்தின்சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளரும்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அஞ்சலி நிகழ்விலும் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

40/2, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி/552342) **குடும்பத்தினர்.**

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 26 04 1938



மண் நெகிழ 26 04 2003

## அமரர் கனகசபை அரசரத்தினம்

(ரிப்போட்டர்)

எங்கள் அன்புத் தெய்வமே!
நூறு முறை அழைத்தோம்
உங்கள் குரல் கேட்கவில்லை
ஆறதல் கூற வரவில்லை என்று
நொந்து விட்டோம்
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பு முகம்
உயிருள்ளவரை நிலைத்திருக்கும்
எம் நெஞ்சில்.

(73505)

56, THORNDON GARDENS,
EPSOM, SURREY,
KT 19 OQW, LONDON, U.K.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் யாழ். மத்திய கல்லூரி மைதானம், பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

15,17,19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 2, 3, 4 ஆம் திகதிகளில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்தத் தகவலை போட்டிச் செயலாளர் க. குமாரசுவாமி தெரிவித்தார். (1-202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.26

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க. கணேஷ் கலந்து கொள்வார்.

(1-207)

* * *

வலி.வடக்கு,ஏப்.26

தீவுகள் தெற்கு வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலாளர் மு. நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேசும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் கு. சிவஞானசுந்தரம், யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ். துரைசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(1-86)

# கருத்தரங்கும் நூல் வெளியீடும்

குருநகர்,ஏப்.26

தீவக லயன்ஸ் கழகம் நடத்தும் தலைமைத்துவ அபிவிருத்திக் கருத்தரங்கும் 'அலுவலக முகாமைத்துவம்' நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள் ளன.

யாழ். போதானா வைத்தியசாலைக் கணக்காளர் நா. இராசநாயகம், யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ. இராசநாயகம் ஆகியோர் இணைந்து இந்நூலை எழுதியுள்ளனர்.

தீவக லயன்ஸ் கழகத் தலைவர் ஐ.ஜி. சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத் தலைவர் க. தேவராசா வெளியீட்டு ரையையும், யாழ்.பல்கலைக்கழ வணிக பீடசிரேஷ்ட விரிவுரையாளர் இ.விஜயகுமாரன் மதிப்பீட்டுரையையும் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா ஆசியுரையையும் நிகழ்த்துவர்.

இவ் வெளியீட்டு நிகழ்வுடன் தலைமைத்துவ அபிவிருத்திக் கருத்தரங்கு கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் தலைமைத்துவம், முகாமைத்துவம், அபிவிருத்தி, செயல்திறன், திறன் விருத்தி ஆகிய விடயங்களில் கருத்தரங்கு நடைபெறும்.

அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வைத்தியசாலை, தனியார் தொழிலகங்கள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, பாடசாலை ஆகிய சகல தொழில்சார் பகுதி அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள் தமது தொழில்சார்திறன் விருத்தியை வளர்க்கவும் பதவியுயர்வு தேர்வுகளுக்கும் சிறந்த வழிகாட்டு நூலாக 'அலுவலக முகாமைத்துவம்' நூல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-51-250)

# முன்பள்ளிச் சிறார்களுக்கு பேச்சுத் திறன் விழா

யாழ்ப்பாணம், ஏப்.26

வலிகாமம் மேற்கு பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத் திறன் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சித்தன்கேணி யில் உள்ள வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இணைப்பாளர் நா.நிரஞ்சனா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி கலந்துகொள்வார். (202)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தசாமி ஞானேஸ்வரி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி ஞானேஸ்வரி 18.04.2008 அதிகாலை ஜேர்மனியில் காலமாகி விட்டார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான் நாகரெட்ணம்- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, சண்முகதாஸ், கனகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவராசா, கனகலிங்கம், தணிகாசலம், குமரகுரு மற்றும் புனிதவதி, சண்முகசுந்தரம், பாஸ்கரன், லீலாவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வாமதேவன் (கொழும்பு), இந்திரதேவன் (இத்தாலி), ஜெயதேவன் (சுவிஸ்), ஜெயந்தி, ரசந்தி (ஜேர்மனி), ஞானதேவன் (ஜேர்மனி), நித்தியானந்தம் (பிரான்ஸ்), ஷாமினி ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திராதேவி (கொழும்பு), ஜொனிற்றா (இத்தாலி), இராசமணி (சுவிஸ்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் கலாமோகன் (ஜேர்மனி), தேவமனோகரி (ஜேர்மனி), தயாநிதி (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் அருமை மாமியும் ஜனனி (கொழும்பு), றொபேட் (இத்தாலி), ஜெயபாரதி (சுவிஸ்), ஜனார்த்தன் (சுவிஸ்), றமணன் (ஜேர்மனி), கார்த்திக் (ஜேர்மனி), றமணி (ஜேர்மனி), தேனுசன் (ஜேர்மனி), தேனுசா (ஜேர்மனி), தேனுஜன் (பிரான்ஸ்), விசாகி (பிரான்ஸ்), நிலோஜன் (பிரான்ஸ்), வினோதன், ஷாகிர்த்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இன்று (26.04.2008) சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

357, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நா.கந்தசாமி (கணவர்).

தொ.பேசி இலக்கங்கள்: 0214590899 (யாழ்ப்பாணம்),
0049213273980 (ஜேர்மனி), 0049831611564 (ஜேர்மனி).
(73483)

## சரவணமுத்து சுந்தரலிங்கம் B.Sc.

(இளைப்பாறிய **CTB Depot Superintendent**, மட்டக்களப்பு)



நல்லூர், செல்லர் வீதியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, இருதயபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுந்தரலிங்கம் அவர்கள் (26.04.2008) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் திருமதி சு.பரமேஸ்வரி (இராணி **B.A.**, இளைப்பாறிய உப அதிபர், இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி கீ.வசுமதி (**UK**), திருமதி உ.விஜிதா (**CTB** அலுவலர், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் கீர்த்திராஜ் (**UK**), உதயகுமார் (**CTB**அலுவ லர், மட்டக்களப்பு), ஆகியோரின் அன்பு மாமனும் கீ.கௌத்தம் (**UK**), சரண், பைசாலி (மட்டக்களப்பு), ஆகியோரின் அன்புப் பேர னும் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் சரவணமுத்து செல்வரத்தினம், கல்முனையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு மதி க.செல்லம்மா, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி த. பராசக்தியம்மா (குமாரவேல் மருந்தக ஸ்தாபன உரிமையாளர்), கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட வைத்திய ஆலோசகர் (**VOG**), டாக்டர் சரவணமுத்து சபாரத் தினம், நல்லூரைச் சேர்ந்த லயன் சீமாட்டி ப.சரஸ்வதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொ.வி.கந்தையா (நொத்தாரிஸ்), குமாரவேலு தம்பிராஜா மற்றும் லயன் வல்லிபுரம் பரமசிவம் **J.P.**, அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (25.04.2008) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டக்களப்பு, கல்வியங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
லயன் வல்லிபுரம்
பரமசிவம் ஜே.பி.,
(மைத்துனர்).

தொடர்பு கொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 065 2223178. (73511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்களும் தேசிய, சர்வதேசப் போட்டிகளில் பங்குகொள்ள வேண்டும்



குடாநாட்டில் மெய்வன்மைப் போட்டிகளுக்கு சிறந்த தரம்மிக்க தொழில்நுட்ப அலுவலர்கள் உள்ளபோதும் அவர்களுக்குப் போதியளவு அனுபவம் இல்லாமை பெரும் குறைபாடாகவே உள்ளது.

இவ்வாறு இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவரும் சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளின் மத்தியஸ்தருமான பி.எச்.டி.வைத்தியதிலக தெரிவித்துள்ளார்.

உதயனுக்கு அவர் வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.வந்த அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் உள்ள மெய்வல்லுநர் போட்டிகளுக்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தென்னிலங்கைக்கு வரவேண்டும். அங்கு நடக்கும் தேசிய மட்டப் போட்டிகள் உட்பட ஏனைய போட்டிகளில் இவர்கள் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றவேண்டும். இதன்மூலம் சிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

குடாநாட்டில் உள்ளவர்கள் தென்னிலங்கைக்கு வருவதில் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம்.

அத்துடன் அவர்களுக்கு பெரும் பணச் செலவும் ஏற்படுகின்றது.

இதனால் அவர்கள் தென்பகுதிக்கு வந்து போட்டிகளில் நடுவராகக் கடமையாற்ற முடியாதநிலை காணப்படுகின்றது.

தற்போது குடாநாட்டில் மெய்வல்லுநர் போட்டிக்கான தொழில்நுட்ப அலுவலர்களாக இருப்பவர்கள் தரம் 04, தரம் 3 ஐச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் தாம் மேலும் முன்னேறவேண்டும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையும் சிரத்தையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இதனால்தான் குடாநாட்டில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மெய்வல்லுநர்களின் தர உயர்வுக்கான பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம். இதன் மூலம் இவர்கள் கூடியளவு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

லான பயிற்சியாளர்களிடம் பயிற்சிகளைப் பெறுவதில் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. ஜேர்மனியிலிருந்து வருகை தந்த சர்வதேச பயிற்றுவிப்பாளரான ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கலாநிதி ஜோக்கின் பிரின்ஸை நாம் முன்னர் யாழ்ப்பாணம் உட்பட்ட தமிழ்ப்பகுதிகளுக்கு அழைத்துச் சென்று பயிற்சிகளை வழங்கினோம்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் மெய்வல்லுநர் போட்டிகளுக்கான புதிய தொழில்நுட்ப தொடர்பான நூல்கள், இறுவட்டுக்கள் என்பவற்றை இங்கு கொண்டு வந்து வழங்கியுள்ளோம்.

தமிழர்களும் சர்வதேச மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இன்றும் கூட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யதுகுலசிங்கம் தேசிய மட்டப் போட்டிகளில் தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்றி வருகின்றார்.

96ஆம், 97ஆம் ஆண்டு காலப்பகுதி

## அதற்கான சந்தர்ப்பங்கள் விரைவில் வழங்கப்படும் என்கிறார் மெய்வன்மைச் சங்கத் தலைவர் வைத்தியதிலக

மே மாத இறுதியில் நடத்தப்படும் பரீட்சை கூடத் தமிழ்மொழியில்தான் நடைபெறவுள்ளது. ஆங்கில வினாத்தாளும் அனுப்பிவைக்கப்படும். ஆங்கிலத்தில் தோற்ற விரும்புவர்களும் தோற்றலாம்.

இங்குள்ள தொழில்நுட்ப அலுவலர்கள் தென்பகுதிப் போட்டிகளுக்கு வருகை தருவதன் மூலம் சர்வதேச மட்டப் போட்டிகளில் நல்ல அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதேபோன்று சர்வதேச மட்டத்தில் உறவுகளையும் பேணக்கூடியதாக இருக்கும்.

போக்குவரத்துத் தடைகள் காரணமாகத் தென்பகுதிக்கு வரமுடியாமை பல வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் இழக்கச் செய்வதுடன் தென்பகுதி விளையாட்டுத் துறையுடனான உறவையும் பாதிக்கின்றது.

மே மாதம் இடம்பெறவுள்ள பரீட்சையில் தற்போது தரம் 04, தரம் 3 இல் சித்தியடைந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்டவர்கள் தோற்றவுள்ளனர். 2008ஆம் ஆண்டுக்கான சர்வதேச மெய்வல்லுநர் சங்கத்தின் விதிகள், சட்ட திட்டங்கள் அடங்கிய நூல் இம்முறை யாழ்ப்பாணத்திலேயே முதல் தடவையாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்தி

அலுவலர்களை இணைத்துக்கொள்வதற்கான பரீட்சை இடம்பெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களை தயார்படுத்துவதற்கு பயிற்சியளிக்க நாம் மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மெய்வல்லுநர் போட்டிகளுக்கான தொழில்நுட்ப அலுவலர்களுக்குத் தென்னிலங்கைப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும். இதனை நல்ல முறையில் அவர்கள் பயன்படுத்தி அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது மெய் வன்மைப் போட்டிகள்

யில் முதல் தடவையாகத் தமிழ்மொழி மூலம் இப்பரீட்சைகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் பின்னர் சிங்களத்திலும் தொடர்ந்து தமிழ்மொழியிலும் பரீட்சைகள் எழுத அனுமதிகள் வழங்கப்பட்டன.

இந்தவகையில் இதனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தமிழ் தொழில்நுட்ப அலுவலர்களின் கடமையும் பொறுப்பும் என்றார்.

**செவ்வி: நவயுகன்**

# சுத்தமான குடிதண்ணீர் தயாரிப்புக்கென சுகாதாரப் பணிமனை போத்தல்கள் விநியோகம்

வலி.தென்மேற்கு,ஏப்.26

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் இப்பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் தயாரிப்பதற்கான பிளாஸ்ரிக் போத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான செயல்முறைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது

'சோடிஸ்' (Solar Water Disinifection) என்ற திட்டத்தின்கீழ் ''ஆரோக்கியமான வாழ்வுக்கு வீட்டிலேயே நீரை சுத்தமாக்கிக் கொள்வோம்'' என்ற புதிய திட்டத்தை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன்பிரகாரம் இப்பிரதேசத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்கள், அரசினர் மருத்துவமனைகள் ஆகியவற்றுக்கு ஒரு தொகை பிளாஸ்ரிக் கொள்கலன் போத்தல்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. (202-135)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.26

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

# மக்கள் முகம்



நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய கா.ராமஜெயம் வடமாகாணக் கல்விப்பணிப்பாளரால் 19.04.2008 முதல் யா/தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு கடமை நிறைவேற்று அதிபராக நியமனம் பெற்றுள்ளார். (70)

* * *



இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை மின் அத்தியட்சகர் பொன்னையா இராமலிங்கமூர்த்தி சபையில் 38 வருடங்கள் சேவையாற்றி கடந்த 10ஆம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இலங்கை மின்சார சபையில் 1971ஆம் ஆண்டு இணைந்த இவர் குளியாம்பிட்டி, உடவளவை, டிக்கோயா போன்ற பகுதிகளில் சேவையாற்றி 1982ஆம் ஆண்டு மின் அத்தியட்சகராக இலங்கை மின்சார சபையால் பதவி உயர்த்தப்பட்டார். பின்னர் கொலனாவை, சுன்னாகம், யாழ்.பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகங்களில் கடமையாற்றி பின்னர் கட்டமைப்புப் பகுதியில் கடமையேற்று நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் கடமையாற்றினார். வவுனியா, மன்னார் பிரதேசங்களில் பணியாற்றி 2005ஆம் ஆண்டு பருத்தித்துறை மின்பாவனையாளர் நிலையத்தில் மின் அத்தியட்சகராகப் பொறுப்பேற்றார். (218)

* * *

பருத்தித்துறை, தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் வீரகத்திப்பிள்ளை வடிவேல் தனது 36 வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.



புலோலி, குரும்பசிட்டியைச் சேர்ந்த இவர் 1972ஆம் ஆண்டு ஆசிரியராகக் கெக்கிராவ பப்பிரிஸ்ற் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நியமனம் பெற்றார். தொடர்ந்து 1977ஆம் ஆண்டு பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்று, பயிற்றப்பட்ட விஞ்ஞான, கணித ஆசிரியரானார். பின்னர் 1979இல் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியராகப் பணியாற்றினார். 1994ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பதவி உயர்வு பெற்ற இவர் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றார். இதனையடுத்து 2002ஆம் ஆண்டு முதல் தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபராகப் பதவியேற்ற இவர் அங்கு ஆறு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் கடந்த வாரம் முதல் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (236)



உலக புவி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலர் பிரிவினால் ''இத்தாவர சங்கமத்துள் மண்வளம் பெருக்கி மானுடம் காப்போம்'' என்னும் பொருளில் முகாமைத்துவ ஆய்வுப்பட்டறை அண்மையில் நடத்தப்பட்டது.

பட்டறையில் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி ப.சசிகலா ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 04 . 04 . 1970

மனம் நெகிழ 13 . 05 . 2001

அமரர்

## சுப்பிரமணியம் சதீஸ்குமார்

திதி: ஷஷ்டி 26.04.2008

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசைமுகம்
ஒருயிர் என்று வாழ்ந்தவனே நீ!
ஓடி ஒழிந்தது தெரியவில்லை
இன்னுயிர் என்று வாழ்ந்தவனே – உன்துயர்
ஏழாண்டுகள் சென்றும் மாறவில்லை
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக நீ வந்திங்கே பிறக்காயோ.

*உங்கள் பிரிவால் துயருறும்:* அப்பா : வி.சுப்பிரமணியம் அம்மா: சு.சித்திரா
தங்கைமார்: த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா (சுவிஸ்), சு.சதீஸ்குமாரி.
தம்பி: சு.சதீஸ்வரன் (தஞ்சாவூர் பல்கலைக்கழகம்)
அத்தான்மார்: ஆ.தங்கராசா, இ.ஈஸ்வரன் (சுவிஸ்), த.சுகுணன்
மருமக்கள்: த.சபிதா, ச.சதீஸ்குமார், அச்சவரா, சு.சாஜித்தியர்.
மைத்துனி: ச.யாழினி (தஞ்சாவூர் பல்கலைக்கழகம்).

வல்லியாவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டி.

(73506)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.26

முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், மிதிவண்டி ஆகியவை ஒரே நேரத்தில் வீதி வளைவு ஒன்றில் மோதிக்கொண்டதில் மிதிவண்டியில் சென்றவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ந.தேவசகாயம் (வயது-60) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-207)

## வலைகள் அன்பளிப்பு

நவாலி, ஏப்.26

'யுனிசெவ்' நிறுவனம் மானிப்பாய் சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 25 பயனாளிகளுக்கு வலைகளை வழங்கியுள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவு சம்மேளனத்தின் தலைவர் நவரத்தினம் தலைமையில் கூட்டுறவு சங்க மண்டபத்தில் வைத்து கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது. (202-100)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

Diploma in Video Editing
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

Diploma in Quick Books
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 28/04/2008 09.00AM


# நீங்காத நினைவில் ஓராண்டு

மண்ணக வாழ்வில் 10 ✶ 12 ✶ 1934



விண்ணக வீட்டில் 28 ✶ 04 ✶ 2007.

## அமரர் அந்தோனிப்பிள்ளை ஸ்ரீபன்

(முன்னாள் யாழ்.மாவட்ட களஞ்சியக் காப்பாளர், C.T.B.)

ஆண்டொன்று கழிந்த போதும் உம் உருவம் எம்மைவிட்டு அகலவில்லை
ஆற்றலிலும் பண்பிலும் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்தீர்கள்
துயரத்தின் உயரத்தில் எம்மைத் தவிக்க விட்டு துயில் கொண்ட
உம் பிரிவால் வாடுகின்றோம் உம் ஆத்ம சாந்தியினை நாடுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்தித் திருப்பலி இன்று (26.04.2008) சனிக்கிழமை காலை 8 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

42/5, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

(73484)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# நினைவலைகள்

## இருபதாம் ஆண்டு

அமரர்

### சம்பந்தர் தம்பியையா

தோற்றம்: 02.02.1910
மறைவு: 29.01.1988

திதி: ஏகாதசி

## ஓராம் ஆண்டு

திருமதி


### தம்பியையா மகேந்திரம்

தோற்றம்: 10.07.1922
மறைவு: 08.05.2007

திதி: சஷ்டி



இப்பூவுலக வாழ்வை
எமக்காக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த
எம் அன்புத் தெய்வங்களே!
எங்கள் அத்தனை உயர்வுகளிலும்
உங்களின் முயற்சிகள் எத்தனை எத்தனை
'மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும்' என
சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டியவரே
ஆலமரமாக நின்று அனைவருக்கும் வாழ்வு தந்தவரே
உங்கள் வேர்களின் வீரியத்தில்
விழுதுகள் நாம் கிளைபரப்பியுள்ளோம்
வேரைத் தேடுகின்றோம் விருப்புடனே நன்றி சொல்ல
எழுந்து வர மாட்டீரோ?
ஆண்டுகள் பல ஆகியென்ன
ஆறுமா ஐயா! அம்மா! உங்கள் பதிவுகள்
உங்கள் அன்பை நினைத்து ஆர்ப்பரிப்பதைத் தவிர
ஆறுதல் என்ன ஐயா எங்களுக்கு
விழிநீர் சொரிந்து நிற்கின்றோம்
விண்ணிலிருந்து வாழ்த்துங்களேன்.



குடும்பத்தினர்.

த.வயித்திலிங்கம், "ஸ்ரீகிருஷ்ணா",
இல.29/1, பலாலி வீதி, திருநெல்வேலி.

(73385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தீர்வுக்கு கால வரையறை இல்லை அழிக்க மட்டும் காலக்கெடு

''ஒன்றுபட்ட நாட்டையும் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால் தமிழ்,முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

''சிறுபான்மை மக்கள் தமது உரிமைகளை முழுமையாக அனுபவித்துத் தாம் மகிழ்ச்சியுடனும் சுதந்திரமாகவும் உள்ளனர் என்பதை உணர்ந்தால் மாத்திரமே ஒன்றுபட்ட நாடு என்ற எண்ணக்கரு இங்கு சாத்தியமாகும்.''

இவ்வாறு இலங்கை நிலைமையின் உண்மை நிலைவரத்தின் அடிப்படையை - பின்னணியை - தெளிவாக உரைத்திருக்கின்றார் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்.

எனவே, ஒன்றுபட்ட நாட்டையும் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால் தமிழ், முஸ்லிம்கள் உட்பட்ட சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதி செய்யுங்கள் என்றும் வழிகாட்டியிருக்கின்றார் அமெரிக்கத் தூதுவர்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 'சமாதான முன்னெடுப்புகளுக்கான வர்த்தக முயற்சி' என்ற கலந்துரையாடலில் பங்கு கொண்டு கருத்துரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு ஆலோசனை கூறியிருக்கின்றார்.

ஆனால், சிறுபான்மையினர் மீதான மேலாதிக்கச் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் கொழும்பு அதிகார பீடத்தின் காதில் இந்த ஆலோசனை ஏறப்போவதில்லை என்பது நிச்சயம். பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிரிலும், சிங்களத் தேசிய வாதச் செருக்கிலும் தீவிரம் கொண்டு - அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டு - அதனடிப்படையில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்து, அவர்களை அடக்கி, ஒடுக்கி, நசுக்கி, கபளீகரம் செய்வதிலேயே தென்னிலங்கை முனைப்புக் கொண்டு நிற்கின்றது.

பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கை விடுவிக்கப்பட்ட பின்னர் இந்த ஆறு தசாப்த காலத்தில் கொடூரமாக அரங்கேறிய பேரினவாதத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளே இன்று இலங்கைத் தீவை இத்தகைய மீள முடியாத உள்நாட்டுப் போருக்குள் ஆழ்த்தி நிற்கின்றன.

இந்தப் பின்னணியைத் தமது பூடகமான வார்த்தைகளில் விளக்கியுள்ள அமெரிக்கத் தூதுவர் இந்த இழிநிலையில் இருந்து விடுபடுவதற்கான மருத்துவத்தையும் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்கள் தொடர்பில் தாராளத்துடனும், பரிவுடனும், அரவணைக்கும் பண்புடனும், நியாயம் செய்யும் உறுதியுடனும் செயற்படும் திடசங்கற்பம் பெரும்பான்மையினருக்கும் அவர்களது பிரதிநிதிகளான ஆட்சியாளர்களுக்கும் ஏற்பட வேண்டும் என்பதையே அமெரிக்கத் தூதுவர் கோடி காட்டுகின்றார்.

ஆனால் சிங்களத்தின் மனவமைப்பில் - அதன் மூளையத்தை - இறுகப் பற்றிப் பீடித்திருக்கும் பேரினவாதம் மற்றும் அடக்கு முறைப் என்பன சிறுபான்மையினருக்கு நியாயம் செய்யவிடாது என்பது தெளிவு. அடக்குமுறை முனைப்பிலேயே அது தீவிரம் கொண்டு நிற்கின்றது என்பதை யதார்த்த நிகழ்வுகள் வெளிப்படையாக எடுத்தியம்புகின்றன.

பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மையினரான தமிழர்களுக்கு உரிய நிவாரணமும் நீதியும் செய்வதை விடுத்து, அவர்களை அடக்கி, ஒடுக்குவதிலேயே கொழும்பு அதிகாரத்தின் சிந்தனை முனைப்புப் பெற்று நிற்கின்றது.

சிறுபான்மை மக்களுக்கு நீதியான தீர்வு ஒன்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகள் என்ற பெயரில் காலத்துக்குக் காலம் ஆரம்பிக்கப்பட்ட எத்தனங்கள் எல்லாம் வெறும் வெளிவேஷ நாடகங்களாகக் கிடப்பில் போடப்பட்டு விட்டன. அடக்குமுறையை நோக்கமாகக் கொண்ட பலாத்கார நடவடிக்கைகளும் படைச் செயற்பாடுகளும் மட்டுமே தங்கு தடையின்றித் தொடர்கின்றன.

தமது நிச்சயமான உரிமைகளுக்காகவும், கௌரவமான வாழ்வை வேண்டியும் போராடும் தமிழர் தரப்பிடம் அடக்குமுறையின் வெற்றிக்கான காலக்கெடு குறித்துப் பிரலாபிக்கும் கொழும்பு, அமைதித் தீர்வுக்கான காலவரையறை குறித்துச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் தமிழர் தரப்பில் பேரம்பேசும் வலிமையுடன் திகழும் தமிழீழ விடுதலைப் புலிகளை அடியோடு அழித்து ஒழிக்கும் தனது ஒரே இலக்குக்கான காலக்கெடுக்களை, காலவரையறைகளைத் தன் பாட்டில் அறிவித்து, அதன்மூலம் தென்னிலங்கையின் அடக்குமுறைச் சிந்தனையையும் பேரினவாத எண்ணப்போக்கையும் உசுப்பேற்றி விடுவதில் அதிக ஈடுபாடு காட்டும் கொழும்பு அரசு, பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மையினருக்கு நீதி, நியாயம் செய்யும் வகையில் முன்னெடுக்கப்படவேண்டிய தீர்வு முயற்சிகளுக்குக் காலக்கெடு அறிவிப்பதாகத் தெரியவில்லை

இப்போது, புதனன்று கிடைத்த வடக்குக் களமுனைப் பின்னடைவுகளை சமாளிக்கும் எத்தனத்தின்போது கூட, இவ்வருட இறுதிக்குள் புலிகளை அடியோடு ஒழித்து விடுவோம் என்ற கங்கணம் கட்டும் அறிவிப்பையே கொழும்பு முன்வைக்கின்றதே தவிர, தீர்வு முயற்சிக்கான காலக்கெடுவைப் பிரகடனப்படுத்துவதாக இல்லை.

ஆட்சிக்கு வந்தால் அடுத்த மூன்றுமாத காலத்துக்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டை உருவாக்கி, அதனை அடையாளம் கண்டு, அதன் அடிப்படையில் தமிழர் தரப்போடு பேசி இலங்கை இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காண்பேன் என்று தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்துமூலம் உறுதியளித்து அதிகாரத்தைக் கைப்பற்றியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவர் பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் அல்ல. இப்போது முப்பது மாதங்களாகின்றன.

அமைதித்தீர்வுக்கான இணக்கப்பாடு ஒன்றைத் தென்னிலங்கையில் உருவாக்குவதில் சிரத்தையும், ஈடுபாடும் காட்டாத அவர், தமிழர் தரப்பின் போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரேயடியாக அழித்து ஒழிக்க வேண்டும் என்ற பேரினவாதச் சிந்தனைக்கான தென்னிலங்கையின் ஒருமித்த கருத்து நிலைப்பாட்டை உருவாக்குவதில் மட்டும் ஒற்றைக்காலில் விடாப்பிடியாக நிற்கின்றார்.

அமைதி முயற்சிகளைக் கிடப்பில் தூக்கிவீசிவிட்டு, அழிப்பு முயற்சிகளுக்கான தென்னிலங்கையின் எத்தனம் உருக்கொண்டு, சந்நதம் பிடித்து நிற்பதன் பின்னணி - தாற்பரியம் - இதுதான்.

இத்தகைய சிந்தனையில் மூழ்கிக்கிடக்கும் ஆட்சியாளர்களின் காதில், சிறுபான்மையினருக்கு நியாயம் செய்யக்கோரும் அமெரிக்கத் தூதுவரின் கருத்து விழப்போவதில்லை என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

# இலங்கை/இங்கிலாந்து ஜீ.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கு உயிரியல் 'ஒலிம்பியாட்' போட்டி எதிர்வரும் ஜூன் மாதம்

யாழ்ப்பாணம், ஏப்.26

இலங்கை உயிரியல் நிறுவகம் பல்கலைக்கழகங்களினதும் கல்வி அமைச்சினதும் அனுசரணையுடன் முதல் தடவையாக இலங்கை உயிரியல் 'ஒலிம்பியாட்' போட்டி ஒன்றை நடத் தவுள்ளது.

2008 அல்லது 2009 அம் ஆண்டுகளில் இலங்கை அல்லது இங்கிலாந்து ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்கள் வயதெல்லை இன்றி இப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் இலங்கை உயிரியல் ஒலிம்பியாட்டின் யாழ்ப்பாண இணைப்பாளரும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் இ.குமாரவடிவேலிடம் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் 'இலங்கை உயிரியல் நிறுவகம், வித்தியா மந்திரபய, வித்யா மாவத்தை, கொழும்பு -7' என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகம் உட்பட நாட்டில் பல்வேறு நிலையங்களிலும் நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கான அனுமதி அட்டை ஜூன் 10 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப் படும்.

தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

50 வீதத்திற்கு மேல் புள்ளிகள் பெறுபவர்களுக்கு திறமைச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. பெறுபேறுகள் www.iobsl.org என்னும் இணையத் தளத்தில் வெளியிடப் படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

## செவிப்புலனற்றோருக்கான கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை புலோலியில்

யாழ்ப்பாணம், ஏப்.26

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் செவிப்புலனற்றோருக்கென 'உழைப்போம் வாழ்வோம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி பசுபதீஸ்வரர் ஆலய கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.றோட்டறக்ட் கழகத்தினர், வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர், வடமராட்சி வங்கியாளர்கள், பருத்தித்துறை வங்கிச் சதுக்க வர்த்தகர்கள் ஆகியோர் இணைந்து இக் கருத்தரங்கை நடத்தவுள்ளனர்.

யாழ்.றோட்டறக்ட் கழகத் தலைவர் கா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார்.

நிகழ்வில் செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (202)

## திருவிழாத் திருப்பலி

யாழ்ப்பாணம், ஏப்.26

அரியாலை புனித யூதா ததேயு யாத்திரைத்தலத் திருவிழாவில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை காலை 7 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் நடைபெறவுள்ளன. (202)

# இடிமின்னல் தாக்கத்தினால் வருடம் தோறும் ரூ. 350 மில்லியன் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது

கொழும்பு, ஏப்.26

இடிமின்னல் தாக்கத்தினால் அரசாங்கத்திற்கு வருடம் தோறும் நேரடியாக 350 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. மறைமுகமாக இதை விட 10 மடங்கு நட்டம் ஏற்படுகின்றது என்று மின்னல் தாக்கம் தொடர்பான நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

மின்னலினால் பெரும் உயிர்ச் சேதங்களும் பொருள்சேதங்களும் ஏற்படுகின்றன. இலங்கையில் வருடம் தோறும் குறைந்தது 70 பேர் கொல்லப்பட்டு விடுகின்றார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க தேசிய மின்னல் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் சன்டிமா கோமஸ் இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் சக்தி மற்றும் மின்துறை இந்த வருடத்தில் மாத்திரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றது. குறைந்தது இரண்டு தடவைகளாவது மின்னல் தாக்கத்தினால் முழு நாடும் இருளில் மூழ்கியிருக்கின்றது. இம்மாதிரி நாடு மூழ்குவது சுவீடன் போன்ற நாடுகளில் இடம்பெற்றிருக்குமானால் மின் மற்றும் சக்தித்துறை அமைச்சர் பதவியிலிருந்து உடனடியாக அகற்றப்பட்டிருப்பார். இலங்கையில் இன்னமும் இம்மாதிரியான நிலைமைகளைச் சமாளிப்பதற்கான வழிமுறைகள் அமைக்கப்படவில்லையென்று டாக்டர் கோமஸ் தெரிவித்தார்.

மின்னல் தாக்கம் காரணமாக பாதுகாப்புப் பிரிவினரே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மின்னல் ஏற்பட்டு இடி முழக்கம் கேட்டவுடன் பாதுகாப்புப் பிரிவு தொடர்புத்துறை வலைப்பின்னல் யாவும் துண்டிக்கப் படுகின்றன. இந்தவகையில் பாதுகாப்புத்துறையின் வான்படைப் பிரிவினரே பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். மின்னல் தாக்கம் ஏற்படும் ஒவ்வொரு சமயமும் வான் படையின் கருவிகள் யாவும் நிறுத்தப் பட்டு விடுவதினால் பெரும் இழப்புக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.26

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாணவர்களின் பண்ணிசைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வினை யா/ கரணவாய் மகா வித்தியாலய மாணவர்கள் நிகழ்த் தவுள்ளனர். (202-78-236)

## 6 சடலங்களையும் அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள, இதுவரை உரிமை கோரப்படாத 6 சடலங்களையும் இனங்காண உதவுமாறு பொது மக்களை வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கிளாலியில் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள 3 ஆண்களினதும் 3 பெண்களினதும் சடலங்களையே அடையாளம் காணுமாறு கேட்கப் பட்டுள்ளது.

உரித்துடையோர் 5 நாள்களுக்குள் சடலங்களைப் பொறுப்பேற்குமாறும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 15 | 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: சப்தமி | பி.இ. 03.25வரை |
| நட்சத்திரம் : | உத்தராடம் முழுவதும் |
| சுபநேரம் : | 08.58 - 10.28 |
| ராகுகாலம் : | 04.28 - 05.58 |

# ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முன்னால் இலங்கையைக் கண்டித்து தமிழர் ஒன்றுகூடல்




பாரிஸ், ஏப்26

இலங்கை அரசின் ஆழ ஊடுருவும் அணியில் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து ஐரோப்பிய நாடாளுமன்ற முன்றலில் உணர்வெழுச்சியுடனான கண்டன ஒன்றுகூடல் ஒன்று கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

பிரான்ஸில் ஸ்ராஸ்பூர்க் நகரத்தில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற முன்றலில் கடந்த புதன்கிழமை மாலை 4 மணியளவில் அல்சாஸ் வாழ் தமிழ் மக்கள் இக்கண்டன ஒன்றுகூடலை நடத்தினர்.

இலங்கை மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதற்காக இருந்த குரலை நசுக்கி, தமிழ் மக்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் இன அழிப்பை மேற்கொள்ளும் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் முன்னைய கிழக்கு ஐரோப்பிய நாடு (ஸ்லோவோக்கியா) அண்மையில் பெருமளவு அழிவு ஆயுதங்களை வழங்கியமை தொடர்பிலான விசனத்தையும் இக்கண்டன ஒன்றுகூடலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்தினர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், பிரான்ஸ் ஊடகவியலாளர்கள், பிரான்ஸ் மத குருமார்களும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டு தமது கவலையைத் வெளிப்படுத்தினர்.

நூற்றுக்கும் அதிகமான தமிழ் மக்கள் இந்தக் கண்டன ஒன்றுகூடலில் பங்கேற்றனர். இக்கண்டன ஒன்றுகூடல் மாலை 6.30 மணிக்கு நிறைவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றவெளிப் பிரதேசத்தில் பற்றைகள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.முற்றவெளிப் பிரதேசத்தில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளை வெட்டி அழிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. துரையப்பா விளையாட்டு அரங்கு, முனீஸ்வரன் கோயில் பகுதி மற்றும் வீரசிங்கம் மண்டபப் பகுதிக்கு முன்பாகவுள்ள சுற்றாடல் என்பன துப்புரவாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் காடுபோல் வளர்ந்திருக்கும் பற்றைகள் மற்றும் புல் செடிகள் என்பன யாழ்.மாநகர தொழிலாளர்களால் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. இதே சமயம் இன்று சனிக்கிழமை துரையப்பா விளையாட்டு அரங்கு, மக்கள் பாவனைக்கு திறந்து விடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (202-224)

**இதோ!**

**சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா பனங்கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/552113)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்நாடலங்கரித்தநாள்:
08.06.1932

திருநாடலங்கரித்தநாள்:
26.04.2006

திருமதி
**சின்னத்தம்பி பாக்கியம் (மேரி)**

ஆண்டிரண்டு கழிந்ததம்மா
ஆண்டவர் பாதம் நீர் சென்று – ஆயிரம்
ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம்
இதயம் துவளுதம்மா – உம் நினைவு
இதயத்தை வாட்டுதம்மா!
இயேசுவின் கிருபையோ – எம்
இதயத்தைத் தேற்றுதம்மா

பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு. (73482)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்



மண்ணுக்கு: 26.10.1956
விண்ணுக்கு: 08.05.2007

அமரர்
**சதாசிவம் பஞ்சலிங்கம்**

அணையாத உம் நினைவுகளுடன்
நனைந்து வரும் வாழ்வில் – உம்
ஓராண்டு இன்று – என்றும்
ஓயாது வாழ்வீர் எம்முள்

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (73503)

குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18.12.1935

உதிர்வு: 26.04.2002

திருமதி
**கனகரத்தினம் புஷ்பராணி**

வானத்து நிலவைக் காட்டி – எம்
பசி தீர்த்த எம் உறவே – தாய்மையின்
சிறப்புதனை தரணியில் காத்தவளே
வாய்மையே உள்ளமதாய் மண்மீது நடந்தவளே
பாரினில் உன்முகத்தை – இனி
பார்த்திடல் என்று அம்மா!
மீண்டுமொரு பிறப்பு உண்டேல் – எம்
உறவினில் கலந்திடம்மா..!

மகாத்மா வீதி,
நெல்லியடி (552518)

குடும்பத்[illegible]

## அதிபர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவிருந்த மூன்று பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு சி.மனோகரனும், மட்டுவில் தெற்கு அ.மி.க.த.க பாடசாலைக்கு வே.சுந்தரலிங்கமும் போக்கட்டி றோ.க.த.க பாடசாலைக்கு கோபாலகிருஷ்ணனும் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## இளம் பெண் காயம்

வேப்பமரத்தின் குழை வெட்டுவதற்காக ஏறிய இளம்பெண் தவறி வீழ்ந்து காலில் படு காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் சங்கீதா (17வயது) என்ற இளம்பெண் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (202-131)

## ஓட்டோ தடம்புரண்டது

யாழ்ப்பாணம், ஏப்.26

அதி வேகத்தில் சென்றுகொண்டிருந்த ஓட்டோ ஒன்று திடீரென தடம்புரண்டதினால் சம்பந்தப்பட்ட ஓட்டோ சேதத்திற்கு இலக்காகியது. சாரதி தெய்வாதீனமாகக் காயமின்றித் தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ். முற்றவெளிப் பகுதியில் இடம்பெற்றது.

வேகக் கட்டுப்பாட்டை மீறிச்சென்ற ஓட்டோ திடீரென 'பிறேக்' போட்டதாலேயே தடம்புரண்டு சேதமானதுக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

## இறுவட்டுவெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.26

நல்லூர் தூய போல் கலைக் கழகம் தயாரித்து வழங்கும் 'அமைதியின் தெய்வம்' இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் புனித யாக்கோபு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

நூல் வெளியீட்டுரையை இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் அருள்பணி எஸ்.பி. நேசகுமார் நிகழ்த்துவார். (202)

## சாரணர் பயிற்சி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.26

இலங்கை சாரணர் சங்கம் நடத்தும் கலைக்கூறு □□ பயிற்சி ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டதன்படி இன்று நடைபெற மாட்டாது எனவும் நாளை காலை8 மணிக்குக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் எனவும் வட மாகாண சாரண ஆணையாளர் தெரிவித்தார். (202)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேர்ட் இன 1 ½ மாதக் சடைக் குட்டிகள் விற்பனைக்குண்டு. இந்த நாய்க்குட்டிகளை வாங்க விரும்புபவர்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்துக்கு வருகை தந்து நாய்க்குட்டிகளைப் பார்வையிட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

றோமான் அன்ரனி [இதயன், முன்னாள் கிராம சேவையாளர், குருநகர்] தொ.பே: 0776011186
இல: 417/10, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (c-552465)

**தவறிவிட்டது**

தோப்புக்காடு, காரைநகரைச் சேர்ந்த ஸ்ரீநாதன் செங்கமலச் செல்வி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (696532982V) அடங்கிய போ்ஸ் வட்டுக்கோட்டை மாவடிச்சந்தி பஸ்தரிப்பு நிலையத்தில் 22.04.2008 செவ்வாய்க்கிழமை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தற்காலிக முகவரி 'சிவபுரம்', வட்டு-வடக்கு, கலைநகர் சித்தங்கேணியில் ஒப்படைத்துதவவும். (c-552364)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
இல.150, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 6335 (73496)

**தவறிவிட்டது** உரும்பிராயைச் சேர்ந்த பொன்னையா துரைராஜா என்பவருடைய தே.அ.அட்டை (383291558V), விசேட அ.அட்டை, இராஜமலர் (535133387V) முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று கோண்டாவில் கலட்டிச் சந்திக்கும் நாவலர் றோட் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ.காசிலிங்கம், பதிவாளர் அலுவலகம், யாழ்.செயலகம் என்னும் முகவரியில் ஒப் படைத்துதவவும். (c-552562)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து
[illegible]
[illegible]
19 முருகேசா லேன், நல்லூர் (73508)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறையைச் சேர்ந்த
கிருஸ்ணசாமி – இன்பராணி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**சிறிகுமார்**
(ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

க.பொ.த. (சா.த) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் அதி விசேட சித்தி 10ஏ பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சிறப்புகள் பெற்று உயர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
பெற்றோர், அண்ணா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் உறவினர்கள்.

கொழும்பு. (73502)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road
Kantharmadam, Jaffna
Phone: 021 2228093
E-Mail : alliancejaffna @ yahoo.com

## சான்றிதழ் வழங்கும் வைபவமும் நூல் வெளியீடும்

**Alliance Francaise de Jaffna** இன் மூலம் நடத்தப்பட்ட பிரெஞ்சு மொழிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அதனைத் தொடர்ந்து பிரெஞ்சு மொழிக் கவிஞர்களின் கவிதை மொழிபெயர்ப்பும் (பிரெஞ்சிலிருந்து தமிழில்) நூலான :

**"விசிறி- 20ஆம் நூற்றாண்டின் மூன்று பிரெஞ்சு கவிஞர்கள்"**

என்ற நூல் வெளியீடும் இன்று (26.04.2008) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு **Alliance Francaise de Jaffna** இல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்: கலாநிதி திருமதி **என்.கிருஷ்ணவேணி**
[நுண்கலைத்துறைத் தலைவர்]

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். (73513)

## 7 ஆம் ஆண்டு நினைவுகளில்...



மலர்வு:
07.04.1964

உதிர்வு:
13.05.2001

**திருமதி அருளம்மா நடராசா**

திதி : சஷ்டி கரசுபரம் (26.04.2008)

ஏழாண்டுகள் கரைந்தாலும் அழியாத நின்நினைவை
சுமந்து நிற்கும் இதயங்கள் ஏங்குதம்மா உன் பிரிவால்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ரா.நதியா (மகள்)
ராகவன் (மருமகன்)
பிரசன்னா (மகன்)
பூஜா, றிஷி (பேரப்பிள்ளைகள்)

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (73512)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 12 1971



மறைவு 13 03 2008

**அமரர் நவரத்தினம் சுதானந்தன்**
(சுதன்)

ஆயிரம் உறவுகள் போல் இருந்தவன் நீ எனக்கு
நீ இன்று இல்லாமல் போனாய் என்கிறார்கள் என் செல்வமே!
உன்னைப் பெற்றதாய் நான் என்றாலும் உறவுகள் அத்தனை பேருக்கும் நீ செல்லப்பிள்ளை
என் வம்சத்தில் உதித்த முதல் பூவே உன் வம்சத்தை விருத்தியாக்க முன்
கருக்கிவிட்டான் காலவன்
புன் சிரிப்பால் கவர்ந்த நாம் ஆனால் இன்றோ நீ எங்கள் புன்னகையைப் பறித்ததேனோ
என் அப்புத்தெய்வம் பிரிந்தது முதல் தெய்வத்தின் வடிவமாய் வந்த தெய்வ மகனே
பார்த்ததும் கவரும் உன் முகத்தை இனி எங்கு காண்போம்

எம் அன்புச் செல்வத்தின் இறுதிச் செய்திகேட்டு நேரில் வந்து துயரில் பங்குகொண்ட உறவுகளுக்கும் மேலும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது இல்லத்தில் இன்று (26.04.2008) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
ஞான வைரவர் கோயிலடி, இருபாலை தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர். (73515)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா சதுக்கத்தடியில் உள்ள சோதனை நிலையத்தை அகற்றுவதற்கு தளபதி வாக்குறுதி

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் தந்தை செல்வா சதுக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவச் சோதனை நிலையத்தை அகற்றுவதாக யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உறுதி அளித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுடன் நேற்றுக் காலை நடந்த சந்திப்பிலேயே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

மாவை சேனாதிராசாவுக்கும் இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 10 மணிக்கு பலாலியில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் கடத்தல், காணாமற்போதல், கொலைகள், கற்பழிப்பு, மனித அவலங்கள் மற்றும் கொள்ளை, களவு போன்றவற்றால் மக்கள் பெரிதும் இன்னல்களை எதிர்கொள்வதாக தளபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்துக் கூறினார்.

தந்தை செல்வா சமாதி மற்றும் தூபி அமைந்துள்ள பிரதேசவாசலில் அமைக்கப்பட்டுள்ள சோதனை நிலையம் அகற்றப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சோதனை நிலையத்தை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த தளபதி-

இராணுவத் தளபதியாக தாம் யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டுகளில் பெருமளவில் கடத்தல், காணமல்போதல், கொலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் -

தவறு இழைக்கும் இராணுவ வீரர்களுக்கு எதிராக தக்க தண்டனை வழங்கத் தயங்கியதில்லை என்றும், பொதுமக்கள் அவலங்களைக் குறைப்பதில் தான் அக்கறை செலுத்தி வருவதாகவும்- தம்மிடம் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத் துணைக் குழுக்கள் இயங்குவதையும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தம்மிடம் கூறியதாகவும் மாவை சோனாதிராசா சொன்னார். (அ-1)

## சட்டசேவையும் ஆவணப்பதிவும்

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு நடத்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நடமாடும் இலவச சட்ட சேவையும் ஆவணப்பதிவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளன.

சுழிபுரம் சமுத்திரமுகாமில் நடைபெறவுள்ள இச் சேவையில் ஜே/ 168, ஜே/171, ஜே/173 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயன் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

## சண்டிலிப்பாயில் நாளை விளையாட்டு விழா

வலி.தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில்நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார் (1-135)

# இலங்கையில் இப்போதைக்கு அமைதிக்குச் சாத்தியமில்லை

## கட்டியம் கூறுகிறார் அமெ. தூதர்

கொழும்பு, ஏப்.26

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மிக அண்மைக்காலத்தில் தீர்வைக்காண்பதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிற்கே உள்ளன என இலங்கைக்கான அமெரிக் கத் தூதர் ரொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வர்த்தக சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்டுள்ள தூதர் இலங்கை போன்ற மோதல் சூழ்நிலை காணப்படும் நாடுகளில் இராணுவத்தீர்வு மாத்திரம் சாத்தியமில்லை என்பதே அமெரிக்காவின் அனுபவமாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதர் மேலும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

மோதலுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது நிச்சயமாக முக்கியமான கேள்வி என்பதுடன் இதற்கு இலகுவான விடைகள் எவையுமில்லை.

இலங்கை அரசு ஏனைய அரசுகளைப் போல தனது மக்களைப் பயங்கரவாதத்திடமிருந்து பாதுகாக்க வேண்டுமென அமெரிக்கா நம்புகின்றது.

இந்த விடயத்தில் இலங்கைக்கு உதவ முடிந்தமை குறித்து அமெரிக்கா மகிழ்ச்சியடைந்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து சேர்வதைத் தடுப்பதற்காக கடல் கண்காணிப்பு ராடர்களை வழங்கினோம்.

எனினும் ஈராக்கிலும், வேறு பகுதிகளிலும் எமது அனுபவங்கள் இலங்கை போன்ற மோதலைக் கொண்டுள்ள நாட்டில் வெறுமனே இராணுவத் தீர்வு மாத்திரம் பலனளிக்காது என்பதைப் புலப்படுத்தியுள்ளது.

மோதலுக்கு வழிவகுத்துள்ள அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வு காண்பதற்காக சமாந்தரமாக அரசியல் தந்திரோபாயமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் சமூகங்கள் மத்தியில் அதிகாரத்தை எவ்வாறு பகிர்ந்துகொள்ளலாம் என்பது குறித்த திட்டத்தைத் தெளிவாக முன்வைப்பதன் மூலம் மாத்திரமே தமிழ்,முஸ்லிம் சமூகங்களுக்கு, இந்தத் தீவில் மதிப்புள்ளது என்பதையும்ஐக்கிய இலங்கையில் அவர்களுக்கு என ஒரு பங்களிப்பு உள்ளதென்பதையும் அங்கு அவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தாங்களே தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையையும் அளிக்கலாம்.

மாகாண சபைகளுக்கு அதிகாரத்தை வழங்குவதற்காக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளதன் மூலம் அரசு இந்த விடயத்தை நோக்கி நல்ல ஆரம்பத்தை மேற்கொண்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிர்காலம் குறித்த சாதகமான கண்ணோட்டமொன்றை ஏற்படுத்த மேலும்செயற்படவேண்டியுள்ளது.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளார். உணர்வுக் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய சமஷ்டி ஒற்றையாட்சி போன்ற பதங்களை இந்த அறிக்கையில் தவிர்ப்பார் என்பது குறித்து அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையின் சகல சமூகங்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களுக்கு அவர்களே தீர்வு காண உதவும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு யோசனை முன்னேற்றகரமானதாக அமையும்.

அரசு மோதலுக்கு அமைதியான அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளை, பொருளாதார நடவடிக்கைக்குத் தலைமை காணும் பொறுப்பைத் தனியார் துறையிடம் ஒப்படைக்க வேண்டும்.

நாட்டின் அனைத்து இனக் குழுக்களிற்கும் சமமான வாய்ப்புகளையும், செல் வச்செழிப்பையும் வழங்குவதற்குத் தன் னால் முடியுமென்பதை நிரூபிப்பதற்கு அரசுக்கு கிழக்கு மாகாணத்தை மீளக் கட்டியெழுப்புவது வாய்ப்பாக அமைந்துள்ளது- என்றார்

# யூசுப் பதான் அசத்தல்; கடைசி ஓவரில் வோர்ன் அபாரம் ராஜஸ்தான் றோயல்ஸிடம் வீழ்ந்தது லக்ஸ்மனின் அணி

ஹைதராபாத், ஏப்.26

யூசுப் பதான் மற்றும் கிரேம் சிமித் ஆகியோரின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க, லக்ஸ்மனின் டெக்கான் சார்ஜார்ஸ் அணிக்கெதிரான ஐ.பி.எல். ருவெண்ரி/20 போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. அதிரடியாக விளையாடிச் சதம் கடந்த சைமண்ட்ஸின் ஆட்டம் இறுதியில் அவரது பந்துவீச்சாலேயே வீணானது.

இந்தியன் கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) சார்பில் இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) போட்டிகள் நடக்கின்றன. நேற்றுமுன்தினம் ஹைதராபாத்தில் நடந்த லீக் போட்டியில் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜார்ஸ் அணி, ஷேன் வோர்னை அணித்தலைவராகக் கொண்ட ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வென்ற வோர்ன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

டெக்கான் சார்ஜார்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக லக்ஸ்மன், கில்கிறிஸ்ற் ஆகியோர் களமிறங்கினர். சிறப்பாகப் பந்துவீசிய யூசுப் பதான், கில்கிறிஸ்ரை (13) வெளியேற்றி நம்பிக்கை தந்தார். அடுத்து அதிரடி அப்ரிடி வந்தார். அதே ஓவரில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசிய இவர்(10) கடைசி ப்பந்தில் ஆட்டமிழந்தார். யூசுப் பதான் தனது முதல் ஓவரில் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி முத்திரை பதித்தார்.

அடுத்துக் களமிறங்கிய சைமண்ட்ஸ் வந்த வேகத்தில் முனாப் பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்து மிரட்டினார். திரிவேதியின் பந்துவீச்சில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்து ரசிகர்களுக்கு வாண வேடிக்கை காட்டினார். மறுமுனையில் லக்ஸ்மன், வோர்னின் சுழலில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார். இவர் 16 பந்துகளில் 16 ஓட்டங்களை எடுத்தார். ராஜஸ்தான் றோயல்ஸ் வீரர்களின் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய சைமண்ட்ஸ் அரைச்சதம் கடந்தார்.

தொடர்ந்தும் அதிரடியாக ஆடிய அவர் வோர்னின் பந்தில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்து இத்தொடரின் அதிவேக சதத்தைப் பதிவு செய்தார். இதற்கு இவருக்கு 47 பந்துகள் மட்டுமே தேவைப்பட்டன. மறுமுனையில் இவருக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுத்த ரோகித் சர்மா 36 ஓட்டங்களுடனும், அர்ஜூன் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். டெக்கான் சார்ஜார்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 214 ஓட்டங்களை எடுத்தது. சைமண்ட்ஸ் 117 ஓட்டங்களுடன் (11 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கடின இலக்கைத் துரத்திய ராஜஸ்தான் அணிக்கு கம்ரன் அக்மல்(12) விரைவில் விக்கெட்டைப் பறிகொடுத்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த யூசுப் பதான், சிமித்துடன் ஜோடி சேர்ந்தார். டெக்கான் சார்ஜார்ஸ் பந்துவீச்சை அடித்து நொறுக்கிய இந்த ஜோடி ஓட்ட எண்ணிக்கையை ரொக்கெட் வேகத்தில் உயர்த்தியது.

அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய யூசுப் பதான், சமிந்த வாஸ் வீசிய 5ஆவது ஓவரில் 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி உட்பட 22 ஓட்டங்களைச் சேர்த்தார். சிறப்பான நிலையில் இருந்த இவர் ஆர்.பி.சிங் பந்தையும் விட்டுவைக்கவில்லை. அவரது ஓவரில் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடித்து கலக்கினார். 21வது பந்துகளில் 50 ஓட்டங்களைத் தொட்டு இத்தொடரின் அதிவேக அரைச்சதத்தை பதிவு செய்தார். தொடர்ந்து அதிரடியாக விளையாட நினைத்த இவர் 6 சிக்ஸர்கள் மற்றும் 4 பவுண்டரிகள் உட்பட 28 பந்துகளில் 61 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். கடந்த ஆட்டத்தில் சோபித்திருந்த ஷேன் வட்ஸன் (4) இம்முறை ஏமாற்றமளித்தார்.

### கைவ் வந்த பின்னர் பரபரப்பு

அடுத்து கைவ் வந்தார். இவர் சைமண்ட்ஸ் ஓவரில் மூன்று சிக்ஸர்கள் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். மறுமுனையில் அரைச்சதம் கடந்த சிமித்தும் பந்தை வரிசையாக பவுண்டரிக்கு விரட்ட ஆட்டத்தில் பரபரப்புத் தொற்றி கொண்டது. இந்த ஜோடி வேகப்பந்து வீச்சை வெளுத்து வாங்க லக்ஸ்மன், அப்ரிதியிடம் பந்தைக் கொடுத்தார். இவரது முதல் பந்தில் கைவ் ஆட்டமிழந்தார். இவர் 16 பந்துகளில் 34 ஓட்டங்களை எடுத்தார். அடுத்த பந்தில் சிமித்தும் (45 பந்துகளில் 71 ஓட்டங்கள்) ஆட்டமிழக்க திருப்புமுனை ஏற்பட்டது. அடுத்து வந்த வீரர்கள் வரிசையாக வெளியேற ராஜஸ்தான் றோயல்ஸுக்கு சிக்கல் ஏற்பட்டது.

இதனால் கடைசி ஓவரில் 17 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் தள்ள[illegible] அந்த ஓவரை [illegible] அணித்தலைவர் வோர்ன் வரிசையாக ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் விளாசி அணிக்கு 'திரில்' வெற்றி தேடி தந்தார். ராஜஸ்தான் றோயல்ஸ் 19.5அவது ஓவரில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 217 ஓட்டங்கள் எடுத்து வெற்றியைப் பதிவுசெய்துதது. வோர்ன் 22 ஓட்டங்களுடனும், பங்கஜ் சிங் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்டநாயகனாக யூசுப் பதான் தெரிவானார்.



வெற்றி தேடித்தந்த ஷேன் வோர்னை பாராட்டும் சக வீரர்கள்

## ஓய்வு பெறும் எண்ணமில்லை - சச்சின்

சென்னை, ஏப்.26

ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் தற்போது இல்லை என்று இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்

இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர், நேற்றுமுன்தினம் தனது 35ஆவது பிறந்த நாளை சென்னையில் கொண்டாடினார். 'மும்பை இந்தியன்ஸ்' அணியை விலைக்கு வாங்கியுள்ள ரிலையன்ஸ் நிறுவனம் சார்பில், சச்சினுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அப்போது சச்சின் கூறுகையில்,

''நாட்டிற்காக தொடர்ந்து சிறப்பாக விளையாட விரும்புகிறேன். எனது தற்போதைய ஆட்டநிலையைத் தொடர விரும்புகிறேன். இந்த ஆண்டு மேலும் சிறப்பாக விளையாடுவேன். எனது நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளிடமிருந்து கிடைத்த வாழ்த்துக்கள்தான் இதுவரை கிடைத்ததில் சிறந்த பிறந்த நாள் பரிசு. பிறந்த நாளை எனது குடும்பத்தினருடன் கொண்டாடியிருந்தால், மேலும் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.'' - என்றார்.

## விளையாட்டு அரங்குகளில்

# ஜப்பானில் ஒலிம்பிக் ஜோதி

டோக்கியோ, ஏப்.26

பலத்த பாதுகாப்புக்கு இடையே ஒலிம்பிக் ஜோதி நேற்றுக் காலை ஜப்பானை வந்தடைந்தது. இன்று அங்கு ஒலிம்பிக் ஜோதியின் ஓட்டம் நடைபெறவிருக்கின்றது.

பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஒலிம்பிக் ஜோதி ஜப்பான் வந்தடைந்தது. அங்கு இன்று ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் நடைபெறுகிறது.

திபெத் பிரச்சினையால் ஒலிம்பிக் ஜோதிக்கு பல இடங்களில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதை அடுத்து பலத்த பாதுகாப்புக்கு இடையே ஒலிம்பிக் ஜோதி டோக்கியோ கொண்டு வரப்பட்டது. இன்று நடைபெறும் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தின்போது 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ஒலிம்பிக் ஜோதியைப் பாதுகாக்கும் வகையில் சீனாவைச் சேர்ந்த உதவியாளர்களும் இந்த ஓட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

[illegible] ஜப்பானில் நேற்று ஒலிம்பிக் ஜோதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப் [illegible] சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்கள் எழுப்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.





பிலியந்தளாவையில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு வைத்தியசாலையில் அவசர சிகிச்சை வழங்கப்படுவதையும் சேதமடைந்த பஸ்ஸையும் படங்களில் காணலாம்

# கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றமில்லை

## சர்வதேச செய்தி ஸ்தாபனம் தெரிவிப்பு

அரசு கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டுள்ள போதிலும் அங்குள்ள இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லையென ஏ.எவ்.பி.செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் வரை கிழக்கில் 21,2001 உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உள்ளனர் என ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இவர்களில் திருகோணமலையைச் சேர்ந்த 8 ஆயிரம் பேரும் உள்ளனர்.

2006இல் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் அவர்கள் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் அரச கட்டடம் மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

கிழக்கு தற்போது அரசின் கைகளில் உள்ள போதிலும் கடந்த 10 மாதகாலமாக இவர்கள் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளதுடன் மனிதாபிமான அமைப்புகளில் தங்கி வாழுகின்றனர்.

சம்பூர் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இவர்கள் தமது பகுதிக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. அவர்களுக்கு அரசு புதிய இடமொன்றை வழங்கியுள்ளது. எனினும் அப்பகுதி அடர்ந்த காடாகவுள்ளது. அது பாதுகாப்பானதல்ல என்கின்றனர் மக்கள்.

போதிய வேலை உணவு மற்றும் குடிநீரின்மை போன்றவையே இவர்களுக்கு பாரியப் பிரச்சினையாகவுள்ளன. என அந்த செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவிக்கின்றது.

# நாட்டின் பல பகுதிகளில் பரவுகிறது சிக்கின்குனியா

### இரத்தினபுரியில் மட்டும் 15,000 பேருக்கு

கொழும்பு,ஏப்.26

சப்பிரகமுவ மாகாணம் உட்பட நாட் டின் பல பகுதிகளில் தற்போது பரவி வரும் காய்ச்சல் 'சிக்கின்குனியா' எனக் கண்டறியப்ப ட்டுள்ளது.

நோயாளிகளின் குருதி மாதிரிகளை பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் பரிசோதித்து, ஆய்வு செய்ததன் மூலம் இது கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சுதத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுவரை சிக்கின்குனியா நோய் காரணமாக சுமார் 25 ஆயிரம் பேர் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - நாட்டின் பல பகுதிகளிலும் எலிக்காய்ச்சலும் பரவி வருவதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.

குருநாகல் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை மட்டும் 4பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் படுகிறது. இவர்களுடன் சேர்த்து இந்த வருடத்தில் எலிக்காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்துள்ளது.

இதனை தீவிர நாடளாவிய ரீதியில் சுமார் ஆயிரத்து நூறுபேர் வரை எலிக்காய்ச்சலுக்கு ஆளாகி இருப்பதாக மருத்துவப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# மடுவை அமைதிப் பிரதேசமாக வலியுறுத்தி உண்ணாவிரதம்

'மருதமடு பிரதேசத்தை சமாதான பூமியாக்குங்கள்' என்ற தொனிப் பொருளில் மன்னார் புனித செபஸ்டியார் பேராலயத்தில் உண்ணாவிரத உபவாச செப வழிபாட்டு நிகழ்வு நேற்றுக்காலை நடைபெற்றது.

நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கவும் எல்லாவித யுத்த மற்றும் இராணுவ ரீதியான நடவடிக்கைகளுடன் கூடிய நடமாட்டங்களில் இருந்து மடு திருப்பதியைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்தே மேற்படி செப வழிபாட்டு உபவாச வழிபாட்டு ஆராதனை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மடு திருத்தலத்தையும் அதன் சூழலையும் சமாதான பூமியாகப் பிரகடனப்படுத்தும் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக நேற்றைய தினமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த உபவாச வழிபாட்டு ஆராதனைக்கு மன்னார் மடுமாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவமல்லாத மக்கள் கலந்து கொண்டனர். (சி)

# கொழும்பு மலர்ச்சாலைகளில் மறைமுக செய்தித் தணிக்கை

## சுதந்திர ஊடக இயக்கம் விசனம்

கொழும்பு,ஏப்.26

முகமாலை கிளாலி பகுதியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் ஏற்பட்டுள்ள பாரிய உயிரிழப்பைத் தொடர்ந்து வைத்தியசாலைகள், மலர்ச்சாலைகளில் அதிகாரிகள் உத்தியோகப்பற்றற்ற தணிக்கையை அமுல் படுத்தியுள்ளனர் என்று சுதந்திர ஊடக இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

வைத்தியசாலைகளுக்குக் கொண்டுவரப்பட்ட இராணுவ சிப்பாய்களைப் புகைப்படமெடுப்பதை அதிகாரிகள் தடுத்து வருவதாக சுதந்திர ஊடக இயக்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மலர்ச்சாலை உரிமையாளர்களுக்கும், செய்தியாளர்களுக்கும், புகைப்படப்பிடிப்பாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகவும் மலர்ச்சாலைகளுக்கு கடும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான மோதலில் படைத்தரப்புக்கு பாரிய உயிரிழப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கலாம் என சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசையும் விடுதலைப் புலிகளையும் தகவல் சுதந்திரத்தை மதிக்குமாறும் சுதந்திர ஊடக இயக்கம் கோரியுள்ளது.

பத்திரிகையாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக யுத்தம் குறித்த தகவல்களையும் செய்திகளையும் அறிவதற்குப் பொதுமக்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுகிறது எனக் கருதுவதாகவும் சுதந்திர ஊடக இயக்கம் அறிவித்துள்ளது.

அரசு வெளியிடும் அறிக்கைகளுக்கு அப்பால் வெளிநாட்டு செய்திச் சேவைகளாலும், சில இணையங்களாலும் மாத்திரம் சுதந்திரமாகத் தகவல்களை வழங்க முடிவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிவந்துவிட்டன
தரம்:5-வெற்றித்தேர்வு
1.2.3.4.5.6.7.8.9.10.11.12..
தரம்:4-வெற்றித்தேர்வு- 1, 2
சகல புத்தகசாலைகளிலும் திங்கள் பெறலாம்.
(கனேசலிங்கத்தின் வெற்றித்தேர்வு என்று கேளுங்கள்.)
மாவட்டரீதியிலான தொடர் பரீட்சை.
தரம்:4-2 தரம்:5-12
ஞாயிறு.27.04.2008
6am, 8am, 10am, 2pm, 4pm
இப்பரீட்சை உங்கள் பிள்ளைகளின் மாவட்ட நிலையை உறுதிப்படுத்தும்.
பரீட்சை நிலையங்கள்.
சயன்ஸ் அக்கடமி – நல்லூர். நியூமற்ஸ் அக்கடமி. மீசாலை
அஸ்ரன்கல்விநிறுவனம் - சுன்னாக்கோட்டை. மின்னொளிகல்விநிறுவனம். கைதடி

## இரணை மடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலை நடத்தின.

ஓடுபாதை பலத்த சேதமடைந்தது என விமானிகள் உறுதிசெய்தனர் என்று ஊடகத்தகவல் மத்திய நிலையம் தெரிவித்தது.

இத்தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் ஏதும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை. (1)

## நல்லகாலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவற்றையும் விட "கூடாத காலம்" அரசியல்வாதிக்கு இருக்குமாயின் தேர்தல் பிரசாரப் பணிக்கு முன்னர் அதற்குப் பரிகாரம் செய்யவேண்டும். இப்படிப் பரிகாரம் செய்யவேண்டியிருப்பதால் சோதிடர்மார் சற்று வேலைப்பளுவுடன் இருக்கிறார்கள்.

## மாதாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வத் தகவல்கள் எவையும் இதுவரை இல்லை.

அவ்வாறெனினும் நாங்கள் இப்போதைக்குத் தேவாலயத்திற்குச் செல்லமாட்டோம். அங்கு செல்ல முன்னர் விடுதலைப் புலிகளுடனும், இராணுவத்தினருடனும் தொடர்பு கொண்டு பேசுவோம். அவர்களுடைய உத்தரவாதங்களைப் பெற்றுக்கொண்ட பின்னரே நாங்கள் தேவாலயத்திற்குச் செல்லவிருக்கிறோம்.

ஏனெனில் அந்தப் பகுதியில் போர் நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, மடு மாதாவை மீண்டும் பழைய இடத்தில் வைத்து கெரலு ஏற்ற முன்னர் உரிய தரப்புகளிடமிருந்து உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

அப்படியொரு உத்தரவாதத்தை இரண்டு தரப்புகளும் எமக்குத் தரவேண்டும்; தருவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்றார்.

## கிழக்குத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் அரச உயர்மட்டம் இப்போது மந்திராலோசனை நடத்திவருவதாகவும் அறிய முடிகின்றது.

அரசின் செயற்பாடுகளுக்கு இதுவரை காலமும் மறைமுகமாக ஆதரவை வழங்கி வந்த ஜே.வி.பி. இப்போது இரண்டு கூறுகளாகப் பிரிந்துள்ள நிலையில், எந்நேரமும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி. துணைபோகக் கூடுமென அரச உயர்மட்டம் அச்சம் கொண்டுள்ளது.

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதால் அதற்கு முன்னதாக, பலம் பொருந்திய இந்த அரசியல் கூட்டணியை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் வெற்றி தோல்வியைப் பொருட்படுத்தாமல் அமையவுள்ள இந்தக் கூட்டணியில், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஆளுங் கட்சியில் இணைந்திருக்கும் கரு ஜயசூரிய தலைமையிலான குழு, ஜே.வி.பியிலிருந்து விலகி நிற்கும் விமல் வீரவன்ஸ தலைமையிலான குழு மற்றும் பிள்ளையான் குழு ஆகியன அங்கம் வகிக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

மொத்தமாகப் பத்துக்கும் மேற்பட்ட அரசியற் கட்சிகளைக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டணி, எதிர்வரும் தேர்தல்களின் போது ஒரே குடையின் கீழ் கூட்டாகப் போட்டியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## அமைச்சரவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டன. இதற்காக பதில் அமைச்சர்மார் நியமிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் அமைச்சரவை மாற்றத்தின்போது இந்த விவகாரத்திற்குத் தீர்வு காண்பதற்கு அரச உயர்மட்டம் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

அமைச்சரவை மாற்றத்தின்போது பல புது முகங்கள் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படும் அதேசமயம், கட்சித் தலைவர்கள் தற்போது வகிக்கும் அமைச்சுப் பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்படமாட்டா எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மருவைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னகர்வு நடவடிக்கைகளின் விளைவாகவே குறித்த பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததாகப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் மடுப் பகுதியில் நிலைகொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் எவரும் தற்போது அங்கு இல்லையெனவும் அவர்கள் அங்கிருந்து முழுமையாக வெளியேறியுள்ளனர் என்றும் ஊடகத் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மடுப்பிரதேசம் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட போதிலும் அங்கிருந்து வடக்குப் புறமாகத் தமது முன்னகர்வு நடவடிக்கைகளை இராணுவம் தொடர்ந்து மேற்கொண்டுள்ளதாகப் பாதுகாப்பு ஊடகத் தகவல் மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டபோது குறித்த பொதியில் குண்டொன்று இருந்தமையைக் கண்டறிந்தனர்.

குண்டு செயலிழக்கும் பிரிவினர் அந்த இடத்திற்கு அழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கப்பட்டது என ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டின் எடை குறித்தும் அது எவ்வாறு அந்த இடத்திற்கு வந்தது என்பதும் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (சி)

பெற்றோர் கவனத்துக்கு!
தரம் 5 புலமைப் பரிசில்- 2008
* நாவலர் வெளியீடான- கலங்கரை விளக்கு- தொடர் பரீட்சை ஞாயிறு தோறும் நடை பெறுகின்றன.
* வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்.
* பரீட்சை விரும்பிய 4 நேரங்களிலும் (காலை 8.30/10.30/மாலை 2.30/3.30)
* முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட வினாக்களைக் கொண்டது.
* உங்கள் பிள்ளையின் வெற்றிக்கு நாங்கள் உத்தரவாதம்.
அடுத்த பரீட்சை- கலங்கரை விளக்கு- 14 (27.04.2008) ஞாயிறு
* பரீட்சைக்கு பின் வினாத்தாள்களை பிரபல புத்தகசாலைகளில் பெறலாம்.
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.